பொது ச...
யாழ்ப்பாணம்.

விலை ரூபா 1—25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 பங்குனி 5 ஜ- ஆகி 25 இதழ் 36
யாப்பாணம் திங்கட்கிழமை 18-3-1985

# வடக்கில் மார்ச் 21-ம் திகதி 1 மணிநேர வேலை நிறுத்தம்!

## 13 தொழிற்சங்கங்கள் கலந்துகொள்ளும் !!

(யாழ்ப்பாணம்)

வடபிரதேச தொழிற் சங்கங்களின் கூட்டுக்குழு துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியான தொழிளாளருக்கும் பாதிக்கப்பட்டவருக்கும் நஷ்டஈடு வழங்கப்படாதற்கு கண்டனம் தெரிவித்து ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனவிற்கு அனுப்பிய 5 அம்சக்கோரிக்கைகளை வலியுறுத்தியும் இம்மாதம் 21-ம் தேதி காலை 10 மணி முதல் 11 மணிவரை வேலை நிறுத்தம் செய்ய முடிவு செய்துள்ளது.

13 தொழிற்சங்கங்கள்

[8ம் பக்கம் பார்க்க]

# இலங்கை இந்திய இருதரப்பு இரகசிய பேச்சுத் தொடர்கிறது!

## இலங்கைவரவேற்பு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்னை தொடர்பாகப்பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. ரமேஷ் பண்டாரி இலங்கை வருவதை இலங்கை அரசு வரவேற்றுள்ளது.

திரு. ரமேஷ் பண்டாரி இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்தியின் உயர்மட்ட வெளிநாட்டுத்தூதுவராக இலங்கை உட்பட ஆறு தெற்காசிய நாடுகளுக்கு விஜயம் செய்ய விருப்பது தெரிந்ததே.

## பாராளுமன்றத்தில் துணை அமைச்சர் குர்ஷித் ஆலம்கான் தகவல்

(புதுடில்லி)

''இலங்கையில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையைத் தணிக்கவும், இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு நிரந்தரமான தீர்வுக்கு உதவவும் இந்தியா சகலவிதமான மார்க்கங்களிலும் முயற்சி செய்து வருகின்றது'' என இந்தியா வெளி உறவு துணை அமைச்சர் திரு. குர்ஷித் ஆலம்கான் இந்தியப் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் அமைச்சர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

இரு நாடுகளுக்குமிடையில் இப்பொழுது இரகசியமான முறையில் ஆலோசனைகள் நடைபெற்று வருவதையும் அவர் வெளியிட்டார்.

இப்பொழுது இருநாடுகளுக்குமிடையில் இரகசியமான முறையில் பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன. அதுபற்றிய விபரம் எதையும் நான் இப்பொழுது வெளியிட முடியாது. ஆனால் சரியான நேரத்தில் எமது முயற்சிகளின் பயனாக ஏற்பட்டுள்ள விளைவுகள் பற்றி பாராளுமன்றத்துக்கு அறிவிக்கப்படும் என்று திரு. கான் கூறினார்.

மிகக் கவனமான சொற்களை கொண்டு தயாரிக்கப்பட்டிருந்த இவ்வறிக்கையில் அண்மையில் இலங்கை பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி புதுடில்லிக்கு விஜயம் செய்தபோது இருதரப்பிலும் பல்வேறு ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டதாகவும் இந்திய துணை அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கை அரசு விரும்புமானால் எந்தவகையிலானாலும் இந்தப் பிரச்னையை தீர்த்துக்கொள்ள உதவுவதற்கு இந்தியா தயாராய் இருக்கின்

(8ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் கடத்தப்பட்ட மூவரும் விடுவிக்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் கடத்தப்பட்ட இரு வர்த்தகர்களும், வர்த்தகர் ஒருவரின் மகனும் நேற்று மாலை வரை விடுவிக்கப்படவில்லை.

இம் மூவர் பற்றியும் எவ்வித தகவல்களும் கிடைக்கவில்லை என உறவினர்கள் தெரிவித்தனர்.

யாழ் நகரில் வழக்கமாக ஞாயிற்றுக்கிழமைகளில் திறக்

(8ம் பக்கம் பார்க்க)

## தென்னிலங்கையில் நான்கு கட்சிகளின் முன்னணி உதயமாகும்!

(கொழும்பு)

தென் இலங்கையிலுள்ள நான்கு கட்சிகள் இணைந்து அரசியல் கூட்டு முன்னணியொன்றை அமைக்கவிருக்கின்றன.

லங்கா சமசமாஜக்கட்சி,

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருமலையில் ஏராளமான தீவிரவாதிகளை ஆயுதப்படை கைதுசெய்தது!

(கொழும்பு)

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை, மன்னார் ஆகிய இடங்களில் நேற்று முன்தினம்

### ராஜாங்க அமைச்சு தகவல்

பாதுகாப்புப் படையினர்மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகளின்போது அதிக எண்ணிக்கையான தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டதாக ராஜாங்க அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''இந்த மறைவிடங்களிலிருந்து காணமல் போன பல

(8-ம் பக்கம் பார்க்க)

## சிங்கப்பூர் ஜனாதிபதி சுகவீனம்

(சிங்கப்பூர்)

சிங்கப்பூர் ஜனாதிபதி திரு. தேவன் நாயக் சுகவீனமுற்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

இவர் கிழக்கு மலேசியாவிலுள்ள சரபாத் நகரில் விஜயம் மேற்கொண்டிருந்த போது சுகவீனமுற்று சிங்கப்பூர் கொண்டு வரப்பட்டார்.

இவர் ஈரல் சம்பந்தமான நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டது.

## இலங்கையின் இனப்பிரச்னை: உடனடித் தீர்வுகாண 'அமிர்' வலியுறுத்து

(சென்னை)

இலங்கையின் இனப்பிரச்னைக்கு உடனடித் தீர்வுகாண உருப்படியான நடவடிக்கைகளை இந்திய அரசு எடுக்க வேண்டும்''.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர்நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் திருச்சியில் நேற்று நிருபர்களிடம் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்:

''இலங்கைத் தமிழ்அகதிகள் பாதுகாப்பான சூழ்நிலையில் தாயகம் திரும்ப இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று கூறினார்.

## அகதிகள் வருகை குறைகிறது

(சென்னை)

24 குடும்பங்களைச் சேர்ந்த 110 இலங்கைத் தமிழ் அகதிகள் நேற்றுமுன்தினம் ராமேஸ்வரம் வந்ததாக அறிவிக்கப்பட்டது.

இலங்கையிலிருந்து ராமேஸ்வரத்திற்கு வரும் அகதிகளின்

(8-ம் பக்கம் பார்க்க)

## வவனியாவிலிருந்து மருந்து வந்து சேர்ந்தது

(யாழ்ப்பாணம்)

வவனியாவிலிருந்து யாழ். மாவட்டத்திற்கான மருந்துகள் நேற்று முன்தினம் ரயில் மூலம் கொண்டுவரப்பட்டுள்ளது. தற்போது யாழ். ஆஸ்பத்திரி பொறுப்பில் உள்ள இம்மருந்துகள், மாவட்டத்திலுள்ள சகல ஆஸ்பத்திரிகளுக்கும் அனுப்பி வைக்கப் படவிருக்கிற ".

மருந்து ஏற்றிவரச் சென்ற லொறி வழியில் இனந்தெரியாதவர்களினால் கடந்த மாதம் கடத்தப்பட்டதால் மருந்துகள் வந்துசேர தாமதமேற்பட்டது. (க)

## அமைச்சரவை

சென்னை, மார்ச், 17

பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தில் 5 உறுப்பினர்கள் கொண்ட அமைச்சரவை பதவி ஏற்றுள்ளது.

## தக்கதோர் அரசியல் தீர்வுகாண அமெரிக்கா இலங்கையை வற்புறுத்தும்

### இந்திய உயர்மட்ட பிரமுகர்களிடம் யு. எஸ். உதவி அமைச்சர் உறுதி

[புதுடில்லி]

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள இனப் பிரச்னைக்கு அரசியல் ரீதியாக தக்கதோர் தீர்வு காணுமாறு அமெரிக்க அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திடம் வற்புறுத்தும் என்று அமெரிக்கா இந்தியாவிடம் உறுதி அளித்துள்ளது.

தற்போது இந்தியாவில் தங்கியிருக்கும் அமெரிக்க வெளி விவகார பிரதி அமைச்சர் மைக்கல் அஃம் கோர்ஸ்ட் இந்த உறுதி மொழியை இந்தியத் தலைவர்களிடம் அளித்தார்.

தற்போது இந்தியாவில் தங்கியிருக்கும் அமைச்சர் இந்தியாவின் பாதுகாப்பமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ்,

(6ம் பக்கம் பார்க்க)

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

உடுவில் அம்மன் கோவிலுக்கு பின்னாகவும், சின்னக்குளத்தடி பிள்ளையார் கோவில் முன் ஒழுங்கையை முகப்பாகக் கொண்ட உடுவில் குளம் புட்டிணியில் 6 பரப்பு தோட்டக்காணி கிணற்றுப்பங்குடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: மு. பாலசிங்கம் முத்துமாரி அம்மன் கோவிலடி நாவலடி, கோப்பாய் தெற்கு, கோப்பாய். 2326

முதல்தரமான விஜிதா நம் 1 நாட்டரிசி கல்லில்லாமல் கைதேர்ந்த தொழிலாளர்களினால் கல் அரித்து தயாரிக்கப்படுபவை வர்த்தகர்கள் விரும்பி விற்பனை செய்வதும் பாவனையாளர்கள் கேட்டு வேண்டுவதும் விஜிதா நம் 1 நாட்டரிசி. தயாரிப்பாளர்களும் வினியோகஸ்தர்களும்; விஜிதா அரிசி ஆலை, தாவடி தெற்கு. கொக்குவில். 1909

தற்பொழுது இயங்கிக் கொண்டிருக்கும் ஐஸ்பழக் கொம்பனி மெசின் உட்படச் சகல தளபாடங்களும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். சி. கனகலிங்கம், ஆறுகால்மடம், (முன்பாக) ஆனைக்கோட்டை. 2287

சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு பக்கத்தில் (பாடசாலை, சந்தை ஆகியவற்றிற்கு அண்மையில்) இரண்டுபரப்பு காணியும், புதிய வீடும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: N. M. A. றசூல், 106, காளிகோவில் ஒழுங்கை, டச்சுவீதி. சாவகச்சேரி. 2305

வண்ணார்பண்ணை தபாற்கந்தோர் ஒழுங்கையில் 1900 சதுர அடி கொண்ட மாடிவீடு மின்சாரம், தண்ணீர்க்குழாய், தொலைபேசி முதலிய வசதிகளுடன். 84/3, தபாற்கந்தோர் ஒழுங்கை, வண்ணார்பண்ணை. தொ. பே. 23803. (2308)

காலிவீதி பம்பலப்பிட்டியில் 600 சதுர அடி வியாபார ஸ்தாபனம் விற்பனைக்குண்டு. தருமசேகரன், 50, விதானையார் வீதி, சுண்டுக்குளி. 2314

நாஷனல் கலர் டி. வி. 20''. ஸ்ரான்ட், அன்ரனா, பூஸ்டர் முதலியவற்றுடன். றலி சைக்கிள் இரண்டும் நல்ல புதிய நிலையில். 84/6, தபாற்கந்தோர் ஒழுங்கை, வண்ணார்பண்ணை. 2307

கொக்குவில் கிழக்கில், யாழ். வளாக மருத்துவ பீடத்துக்கு வடகிழக்காக பலாலி றோட்டுக்கண்மையில் 7 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. பிரித்தும் கொடுக்கலாம். தொடர்பு: விளம்பர இல: 2229, C/o, ஈழநாடு, யாழ்ப்பாணம். 2229

## தேவை

பிறேஸியர் தைப்பதற்கும், ஆடைகள் தைப்பதற்கும் அனுபவமுள்ளவர்கள் தேவை. நேரில் வரவும். 819, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2311

ட்ராக்டர் டிரைவர் 15 வருட கமவேலை அனுபவம் உள்ளவர் தேவை. விபரம் நேரில் Haran Hardwares 68, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2302

## தேவை

நடனஆசிரியை [வசதிக்கட்டணப்பணத்தில்] உடன் தேவை. G. C. E A/L) மூன்று பாடம் சித்தியுடன் கூடிய நடன தராதரமுள்ளவர்கள் 25-03-85க்கு முன் நேரில் தொடர்பு கொள்ளவும். அதிபர் யா/அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி. 2320

## வாடகை

பருத்தித்துறையில் அரசினர் வைத்தியசாலையிலிருந்து நூறு யார் தூரத்தில் புதிய சகல வசதிகள் உள்ள வீடு வாடகைக்கு உண்டு. 122, ராசாவின் தோட்ட வீதி, நல்லூர். 2319

## தவறிவிட்டது

வேலாயுதபிள்ளை ஜெயக்குமார் ஜமுனா வீதி நல்லூர் என்பவருடைய அடையாள அட்டை கடந்த மாதம் திக்கம் சந்தையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பூநகரி லேன் கொக்குவில் மேற்கு கொக்குவில் (பால்பண்ணை) என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். 2318

## பயிர்க் காப்புறுதி நஷ்டஈடு

(பண்டத்தரிப்பு)

கடந்த காலபோக நெற்செய்கையில் நஷ்டமடைந்த தொல்புரம் கமநலச் சேவைப் பகுதியைச் சேர்ந்த 65 விவசாயிகளுக்கு பயிர்க்காப்புறுதித் திட்டத்தின்கீழ் நஷ்டஈடு வழங்கப்படவுள்ளது.

தொல்புரம் கமநலச் சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் திரு. பி. சூசைப்பிள்ளை இதற்கான சிபார்சைச்செய்து விண்ணப்பங்களை பிராந்திய பயிர்க்காப்புறுதிப் பணிப்பாளருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

[யாழ்ப்பாணம்]

வசாவிளான் மடத்தடியில் ஒரு குடும்பத்தினரிடையே ஏற்பட்ட மோதலில் பலர் படுகாயமுற்று தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (மா)

## பதவியுயர்வு

(சாவகச்சேரி)

கொடிகாமம் தபால் நிலையத்தில் தபால் ஊழியராகக் கடமை புரிந்த திரு ஐயாத்துரை ஜெயராசசிங்கம் பதவி உயர்வு பெற்று மந்துவில் உப தபால் நிலையத்தின் உபதபால் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். (க)

## விற்பனைக்கு

South African Galvanised Pipes

½ இஞ்சி மொத்தம் 20 அடி
நீளம் ரூபா 100/- மட்டும்
¾ இஞ்சி மொத்தம் 20 அடி
நீளம் ரூபா 150/- மட்டும்

வரையறுக்கப்பட்ட கையிருப்பு

ஹதிர் ஹாட்வெயர்ஸ்
11/1, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.
2316

## 31ம் நாள் நினைவஞ்சலி

திருமதி சரஸ்வதி நவரத்தினம்
(சரஸ் அன்ரி)



மலர்வு: 10-8-1912

உதிர்வு: 16-2-1985

எங்கள் அன்பு அம்மா! உங்கள் திடீர் பிரிவால் எங்களையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டுச்சென்று விட்டீர்கள்! உங்கள் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கிறோம்.

பிள்ளைகள், மருமககள, பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
'ரட்ணவாசா', கல்லூரி ஒழுங்கை, மானிப்பாய். 2298

## இன்று 31வது நினைவஞ்சலி

முருகுப்பிள்ளை பரதன் (தலைவர்)



மலர்வு: 5-12-195?

உதிர்வு: 16-?-1985

நெஞ்சு துளைக்கப்பட்டு ஓடியத்தா குருதிவெள்ளம்,
தஞ்சம் என்றிருப்போர் வாடியது கருதிலையோ
வஞ்சகன் அந்தகன் அகால வேளையிலே
வந்தனனோ இன்னுயிர் பறித்திடவே இல்லை
இல்லை விசுவாசிகளுக்கு வாழ்வு மாறுவதே
தவிர அழிவதில்லை மரணம் ஆத்மாவைக்
கொல்வதில்லை

முருகுப்பிள்ளை குடும்பத்தினரும், மைத்துனர்கள், மைத்துனிகள், மாமன்-மாமி, நண்பர்கள், உறவினர்கள்.
ஊரிக்காடு. வல்வெட்டித்துறை
18-3-85 2306

## 2வது பிறந்தநாள் வாழ்த்து

வசந்தகுமார்



ஏழாலை மேற்கு தேவிதோட்டத்தைச் சேர்ந்த இலங்கநாதன் வளர்மதி தம்பதிகளின் அருந்தவப் புதல்வன் வசந்தகுமார் (விநோத்) அவர்கள் தனது இரண்டாவது பிறந்தநாளை 18-3-85 திங்கட்கிழமை அதாவது இன்று மேற்கு ஜெர்மனியில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். அவரை மேற்கு ஜெர்மனியிலுள்ள அப்பா, அம்மா, பவளம் மாமி, மாமா, பத்தன் சித்தப்பா, சித்தி, உமாகரன் மச்சான், பொபி அண்ணா, பாலன் மாமா, மகான்மாமா, மகேந்திரன் பெரியப்பா (நெதர்லாந்து) ஆகியோரும், ஏழாலை மேற்கைச் சேர்ந்த அப்பப்பா, அப்பம்மா, பெரியமாமா, பெரியமாமி, மகாதேவன் பெரியப்பா, பெரியம்மா, மச்சாள்மார் வைதேகி, ஜானகி, வாசுகி ஆகியோரும், தின்னவேலி கிழக்கைச் சேர்ந்த சின்னமாமா, மாமி சுதா, ஜனகரன் ஆகியோரும், அராலியைச் சேர்ந்த அம்மப்பா, அம்மம்மா, பெரியம்மா, சித்தி ஆகியோரும், ஏழாலை மத்தி கண்ணகை அம்மன் அருளால் பல் கலையும் கற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கஎன வாழ்த்துகின்றார்கள். 2325

## ஓராண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்: 05-11-1956

மறைவு: 28-03-1984

நடராசா யோகராசா

யோகம்! நீயில்லாது நிம்மதிக்கு பஞ்சமிங்கே. ஒரு நாள் நீயில்லாத ஒளிராத உலகினிலே ஓராண்டு ஓடியதோ? யோகம்! வாழ் நாளில் யார் வருவார் நீ இல்லா இடம் நிறைக்க!

உம்பிரிவால் வாடும் அன்பு
அம்மா, சகோதரர்கள், சகோதரிகள்,
அத்தான், அண்ணி, மருமக்கள்.
7, ஆஸ்பத்திரி வீதி,
மானிப்பாய். 2322

## இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி



அமரர்
அ. ம.
அந்தோனிப்பிள்ளை

மறைவு: 18-3-83

ஈராண்டு காலமென்ன
ஓராயிரம் ஆண்டானாலும்
மாறாது உம் நினைவு
ஈராண்டு தினமான இன்று
எங்கள் அஞ்சலி

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

குருமடம்,
கரம்பன். 2323

# வளைகுடா யுத்தம் தணியும் சாத்தியமில்லை!

புதுடில்லி, மார்ச். 17

வளைகுடா யுத்தம் ஆகாய, கடல், தரை மார்க்கங்களில் மிகவும் தீவிரமடைந்து வருகின்றது. இதனால் இப்போர் விரைவில் தணிந்துவிடும் சாத்தியம் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

தெற்கு ஈராக்கினுள் ஈரானியப் படைகள் நெடுந்தூரம் முன்னேறியுள்ளன. இதே வேளை ஈராக்கியப் படைகள் ஏவுகணை ஒன்றின்மூலம் ஈரானின் எண்ணெய்த் தாங்கிக் கப்பல் ஒன்றைத் தாக்கியுள்ளது.

ஆயிரம் ஈராக்கியர்களைக் கொன்றுள்ளதாக அல்லது காயப்படுத்தியுள்ளதாக ஈரான் அறிவித்துள்ளது.

யுத்தம் தீவிரமடைந்துள்ளதை அடுத்து ஈராக்கிய ஜனதிபதி சதாம் ஹுசைன் யுத்த முனைகளைப் பார்வையிட்டுள்ளார்.

கடந்த நாலரை வருடங்களாக இந்த வளைகுடாப்போர் இடம்பெற்று வருகின்றது. இப்போர் மேலும் நீடிக்குமானல் வளைகுடாப் பிராந்தியம் பெரும் சேதங்களை எதிர்நோக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. [கி]

## ரயில் கட்டணங்கள் அதிகரிப்பு

(புதுடில்லி)

இந்தியாவில் ரயில் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதுதொடர்பான கட்டண அதிகரிப்புகளை இந்திய ரயில்வே அமைச்சர் திரு. பன்சிலால் நேற்று இந்தியப் பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

## ரஜீவ் அரசு முதலாவது 'பட்ஜட்'டுக்குப் பாராட்டு!

[புதுடில்லி]

பிரதமர் ரஜீவ் தலைமையிலான இந்திரா காங்கிரஸ் அரசின் முதலாவது பட்ஜட் இந்தியாவில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது

இப்பட்ஜட் குறித்து முன்னுள் நிதியமைச்சர்கள் இருவர் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். இதில் தெரிவிக்கப்பட்டுள்ள விபரங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டால் அவை நல்ல விளைவுகளைத் தருமென்று தெரிவிக்கப்பட்டது

வர்த்தகர்களும் இப்பட்ஜட்டை வரவேற்றுள்ளனர். எதிர்காலத்தில் வர்த்தக முயற்சிகளை ஆரம்பிக்கவும், விஸ்தரிக்கவும் இந்த பட்ஜட் வசதியளிக்கிறதெனக் கூறப்பட்டது [கி]

# ஒற்றுமைக்கு வலியுறுத்து

(சென்னை)

தமிழகத்திலுள்ள பலதீவிரவாத இயக்கத் தலைவர்கள் ஒற்றுமையின் அவசியத்தை வலியுறுத்தி இருப்பதாக பி.பி.ஸி. அறிவித்தது.

தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் தலைவர் புளொட்) உமாமகேஸ்வரன் தமிழீழதீவிரவாத குழுக்களிடையே ஆயிரம் வேறுபாடுகள் இருந்தாலும் தமது இயக்கும் எல்லா இயக்கங்களிடையேயும்ஒற்றுமையை ஏற்படுத்த முயலும் என்று கூறியுள்ளதாகவும், வடபகுதியில் 2 லடசம் சிங்கள வரை குடியமர்த்தும் அரசின் திட்டத்தினல் இவ் வியக்கங்களிடையே ஒற்றுமை ஏற்பட்டிருப்பதாகவும் அச் செய்தி தெரிவித்தது.

இந்த இயக்கங்களின் ஒற்றுமைக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஆதரவளிக்காவிட்டால் அது தனித்து நிற்க வேண்டிய நிலை ஏற்படும்'' என்று தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம்திரு அமிர்தலிங்கம் தெரிவித்திருப்பதாகவும் பி.பி.ஸி தெரிவித்தது.

## இந்திய வீரர்கட்கு தொலைக்காட்சி பெட்டிகள்

[பம்பாய்]

உலக கிரிக்கெட் சாம்பியன்களான இந்திய கிரிக்கெட் வீரர்களுக்குத் தொலைக்காட்சிப் பெட்டிகள் அன்பளிப்புச் செய்யப்படவுள்ளன.

பம்பாயிலுள்ள தனியார் நிறுவனமொன்று இந்த வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை ஒவ்வொரு இந்திய கிரிக்கட் வீரர்களுக்கும் வழங்கவுள்ளது.

இதுதவிர இந்தியாவின் பல தனியார் நிறுவனங்களும் இந்திய வீரர்களுக்கு அன்பளிப்புகளை அளித்துள்ளன. (கி)

# கிளிநொச்சியில் கைதான 32 இளைஞர்கள் விடுதலை

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு ஆனையிறவு முகாமுக்கு கொண்டுசெல்லப்பட்ட 32 இளைஞர்கள் துரித விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பிரஜைகள் குழுவின் செயலவைக் கூட்டத்திற்கு தலைமைதாங்கி உரையாற்றுகையில் பிரஜைகள்குழு உபதலைவர் டாக்டர் கே. சுப்பையா குறிப்பிட்டார்.

புனிததிரேசாள் ஆலயத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் டாக்டர் சுப்பையா மேலும் பேசுகையில்; கைதான இளைஞர்களை விடுவிக்குமாறு இணைப்பதிகாரி மேஜர் குலதுங்காவிற்கு நாம் உடனடியாகவே வேண்டுகோள் விடுத்தோம். எமது கோரிக்கையின் பேரில் விசாரணைகளை துரிதப்படுத்தி கைதான 32 இளைஞரும் விடுவிககப்பட்டது வரவேற்கத்தக்க செயலாகும் என்றார்.

கிளிநொச்சிப் பிரதேசத்தில் சிறுபோக வேளாண்மையை எதிர்நோக்கும் விவசாயிகளின் பல்வேறு பிரச்னைகள் தொடர்பாக மேலதிக அரசாங்க அதிபர் (காணி) நீர்ப்பாசனப் பொறியியலாளர் ஆகியோருடன் தொடர்புகொண்டு தீர்த்துவைப்பதென்ற மற்றும் ஓர் பிரேரணையும் நிறைவேற்றப்பட்டது. தெல்லிப்பளை துர்க்கைஅம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்திற்கு கவலையும் கண்டனமும் தெரிவிப்பதெனவும் கிளிநொச்சிப் பிரஜைகள் குழுவினர் முடிவுசெய்துள்ளனர்.

## கைதடி பெண் தொழிலாளர்:

# சம்பள உயர்வு கோரி வேலைக்குச் செல்லவில்லை

[சாவகச்சேரி]

சம்பளஉயர்வு கோரி கைதடி மத்திய பகுதி பெண் கூலித் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தைமேற்கொண்டுள்ளனர்.

தோட்டங்களில் புல்லுப் பிடுங்குதல், மிளகாய்ப் பழம் பறித்தல் போன்ற கூலி வேலை செய்துவரும் இப்பெண் தொழிலாளர்கள் அயல் கிராமத்தில் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவதுபோல தமக்கும் பதினைந்து ரூபா சம்பளம் வழங்க வேண்டுமெனக் கோரியே இப்போராட்டத்தை தொடர்ந்தனர்.

இதுவரை காலமும் எட்டு மணித்தியாலம் வேலை செய்து வந்த இவர்களுக்கு பத்து ரூபா தான் கூலியாக வழங்கப்பட்டதாம் இதனைக்கொண்டு தமது சீவியத்தை நடத்த முடியாமையாலேயே ஐந்து ரூபா சம்பள உயர்வு கோரிநிற்கிறார்கள்

இவர்களது கோரிக்கையை ஒரு சில தோட்டச் சொந்தக்காரர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை எனத் தெரியவருகிறது.

எது எப்படி வரினும் தாம் பட்டினி கிடந்தேனும் எமது கோரிக்கையைநிறைவேற்றியே தீருவோம் என இவர்கள் கூறுகின்றார்கள். [து]

## வங்கி ஊழியர் நிதிஉதவி

(மாவிட்டபுரம்)

மயிலிட்டிப் பகுதியில் கஷ்ட நிலைக்குள்ளாகியுள்ள மீனவ மக்களுக்கு காங்கேசன்துறை இலங்கை வங்கி ஊழியர்கள் நிதிஉதவி செய்துள்ளனர்.

வங்கி ஊழியர்களினால் 1000 ரூபா பணம் உடுபிடவை, உணவுப் பொருட்கள் என்பன வாங்குவதற்காக வழங்கப்பட்டுள்ளது.

## பீஹார் மாநிலத்தின் தேர்தல் முடிவுகள்

[பட்னு]

பீஹார் மாநிலத்தில் மறுவாக்குப் பதிவு நடைபெற்ற 8 தொகுதிகளின் தேர்தல் முடிவுகளும் வெளிவந்துவிட்டன. இந்த எட்டு தொகுதிகளில் 2 தொகுதியில் இந்திரா காங்கிரசும், 2 தொகுதிகளில் தலித்மல்தூர் கிஸான் கட்சியும், 1 தொகுதியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் 1 தொகுதியில் ஜனதாவும் 2 தொகுதிகளில் சுயேட்சையினரும்வெற்றிபெற்றனர்.

பீஹாரின் மொத்த இடங்கள் 324. தேர்தல் நடைபெற்றது 319 தொகுதிகள். இந்திராகாங்கிரஸ் 192, தலித்மல்தூர்கிஸான் 46, பாரதீய ஜனதா 15, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 13 இந்திய கம்யூனிஸ்ட் மாக்ஸிஸ்ட் 1, ஜனதா 12, சுயேட்சை 29

# பா.உ. சண்முகம் அமைச்சரானார்!

சென்னை, மார்ச் 17

அ தி மு. க. பொதுச் செயலாளர் திரு. பா உ. சண்முகம் தமிழக சட்டசபையில் புதிய அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

முதலமைச்சர் திரு. எம். ஜி ராமச்சந்திரனின் சிபார்சையடுத்தே இவரை ஆளுநர் குரானு அமைச்சராக நியமித்துள்ளார். இதனையடுத்து தமிழக சட்டசபை அமைச்சரவையின் எண்ணிக்கை 25 ஆக உயர்ந்துள்ளது.

திரு. பா. உ. சண்முகம் நகராட்சி, ஊராட்சி ஒன்றியம், வட்டார வளர்ச்சி, ஊரகக் கடன் நிவாரணம் ஆகியவற்றுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார். [கி]

## வேலிக்குதீ!

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கில் காலை இடம்பெற்ற சம்பவத்தின் போது சில வீடுகளின் வேலிகளுக்கு தீவைக்கப்பட்டதாகவும், விலை பெறுமதியான பொருட்கள் எடுத்துச் செல்லப்பட்டதாகவும், சிலர் தாக்கப்பட்டதாகவும் கூறுப்படுகிறது

## பயங்கரவாதிகளின்

# "போலிப் பிரசாரத்துக்குப் பின்னணியில் அமிர்!"

## மொரட்டுவையில் லலித் பேச்சு

[கொழும்பு]

''த. வி கூட்டணிச் செயலாளர் அமிர்தலிங்கம், பயங்கரவாதிகளின் போலிப்பிரசாரங்களுக்குப் பின்னணியில் இருந்து இயங்குகிறார்'' என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

திரு அத்துலத்முதலி மொரட்டுவையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மகாபொல கூட்டமொன்றில் உரையாற்றினர். அப்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. லலித் மேலும் கூறியதாவது,- ,'திரு. அ. அமிர்தலிங்கம் உறுதியற்ற அரசியல் எதிர்காலத்தைக் கொண்டுள்ளார் பயங்கரவாதிகளின் போலிப் பிரசாரங்களுக்குப் பின்னணியில் அவர் இருந்து வருகின்றார். திரு. அமிர்தலிங்கத்தின் போக்கு இலங்கையின் பெரும்பான்மை சமூகத்தவரை ஆத்திரமடையச் செய்வதாகவும் இருக்கின்றது.''

அரசாங்கம் பயங்ரவாதிகளைக் கையாளும் விதம்குறித்து எதிர்கட்சிகள் பல்வேறு விமர்சனங்களை வெளியிடுகின்றன. ஆனல் அரசு வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை அவர்கள் நேரில் சென்று பார்வையிடவேண்டும்'' என்றார். (கி)

## யாழ்ப்பாணத்தில் மா, சீனி விற்பனையில் தேக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மா, சீனி வாங்குவோர் தொகை பெருமளவில் குறைந்துள்ளது.

பொதுமக்களிடம் பணப் புழக்கம் இல்லாததே இதற்குக் காரணம் எனக்கூறப்படுகிறது.

முன்னர் போல் மா, சீனி ஆகியவற்றை பெருமளவில் எவரும் வாங்கி சேமித்து வைப்பதில்லை என்றும் கூறப்படுறது.

அரிசி விலை குறைந்துள்ளதால் மாவை வாங்குவோர் தொகை குறைந்திருப்பதாகவும் கூறப்படுகிறது. (க)

## திருக் குளிர்ச்சியும் ஆராதனைகளும்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணை-கன்னதிட்டி அருள் மிகு காளியம்பாள் திருக்குளிர்ச்சி திரு நன்னீராட்டலும், ஆராதனைகளும் அடுத்தமாதம் 4ம் திகதி நடைபெறவுள்ளது.

## வான் எடுத்துச் செல்லப்பட்டது

(சுண்டிக்குளி)

யாழ் சமூகசேவைப் பகுதிக்குச் சொந்தமான வான் நேற்று முன்தினம் இனந்தெரியாத இளைஞர்களால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

மணிவாக்கு

உறு பசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு.

— குறள்

## நமது நோக்கு

## தோல்விக்கு தூபமிடாதீர் !

இலங்கை வாழ் தமிழ் மக்கள் சுதந்திரம் இன்று உலகறிந்தவிடயம். பாராளுமன்ற வாதம், சத்தியாக்கிரக இயக்கம், அரசியல் பேச்சுவார்த்தை போன்ற பல கட்டங்கள் கடந்தநிலையில், இளைஞர் ஆயுதப் போராட்டம் உலகின் கவனத்தைக் கவர்ந்திருக்கிறது.

ஆயுதப் போராட்டம் ஒரு நாட்டின் சிறுபான்மைச் சமூகத்துக்கு எவ்வாறு வெற்றியளிக்கும்? இந்த வினா இன்றும் கேட்கப்படுகிறது! ''இது பயங்கரவாதம்; இன்றுசர்வதேசஇயக்கமாகச் செயற்படுகிறது; இதனை அடக்கி ஒடுக்கிய பின்பே எந்த அரசியல் தீர்வும் சாத்தியமாகும்.'' இந்த வாதம் இலங்கை அரசைப் பீடித்திருக்கிறது; இந்தநிலை மாற்றமுடியாதென்பதல்ல.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்ட வரலாற்றை நன்கறிந்த நாடுகள் எவையும் இன்றைய இளைஞர் ஆயுதப் போராட்டத்தைக் கண்டிக்க முன்வரவில்லை.

இந்தப் போராட்டத்தில் அனுதாபங் கொண்ட இந்தியா !இலங்கை அரசைக் கவிழ்க்கும் எந்த நடவடிக்கைக்கும் இடமளிக்காதென்பது எல்லோரும் அறிந்த உண்மை; பிரிவினையை என்றுமே ஆதரிக்கவில்லை.

தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ உறுதிகொண்டிருக்கின்றனர் என்பது தெளிவாக உணர்த்தப்படுகிறது. இவ்வித இயக்கத்தில் நம்பிக்கை கொள்ளாதவர்கள், ஆதரவு காட்டாதவர்கள் தொடக்கத்தில்பலர்; இன்று அரசியல் தீர்வு வரமுடியுமானால் அதற்கு மூலகாரணம் இளைஞரின் சாதனையேஎன்ற நம்பிக்கை கொண்டிருக்கின்றனர்.

சிங்கள மக்களின் ஆதரவைத் தேடி, நாட்டுக்கு ஆபத்து என்ற கோஷத்தை அரசு கிளப்புகிறது.

நாட்டுக்கென்ன ஆபத்து? இந்தியா, குறிப்பாக தமிழ் நாடு பழைய வரலாறு மீண்டும் செயற்படுவது போல படையெடுக்கும் என்ற பீதியைத்தானே பரப்பி வருகின்றது; இது தனக்கே பாதகமாக முடியுமென்ற தொலை நோக்கு அரசுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

தமிழ் மக்களின் உணர்வுகள் எந்தஅளவு வலுத்திருக்கிறது? யாரில் ஆத்திரம் கொண்டுள்ளனர்? அரசிலா, அல்லது தங்கள் சொந்தப் பிள்ளைகளான தீவிரவாதிகளிலா? எவ்வாறு மக்கள் மனதை தீவிர இளைஞர்களுக்கெதிராக திசை திருப்பலாம்? இவ்வாறு திண்டாடுகிறது இன்றையஅரசு.

இதற்கிடையில் யாழ்ப்பாணத்தில் தினசரி நடைபெறும் பெருங் கொள்ளைகளும் கடத்தல்களும், பொதுஜன தினசரி வாழ்வைக் கெடுத்துவிடும் குழப்பங்களும் பொதுமக்கள் மத்தியில் துன்பத்தையும் ஏமாற்றத்தையும் பரப்பி வருகின்றன

இவற்றிற்கு யார் பொறுப்பு? எவராயினும், எந்தக் கூட்டத்தினராயினும் நாம் சுதந்திரம்பெற, எங்கள் உரிமையை நிலைநாட்ட வல்லவர்கள் அல்ல என்ற கருத்துக்குத் தூபம் இடுபவர்களே!

எந்த வகையிலும் தமிழ் மக்கள் உரிமைகளை நீண்ட காலம் மறுத்துவரும் இலங்கை அரசுக்கு, மறைமுகமாக உதவும் ஐந்தாம் படையென்று இவர்களைக் கொள்வதில் என்ன தவறு? எரியும் வீட்டில் பிடுங்கினது அறுதி என்று செயற்படும் கூட்டத்தினர் வீட்டின் பகைவர்கள்.

மக்கள் மத்தியில் உருவான எழுச்சிக்குத் தடையாகக் காணப்படுபவை இத்தகைய கீழ்த்தரமான செயல்கள். இவை எமது சமூகத்துக்கு இருக்கும் மதிப்பைப் பாழாக்கிவிடுமென்பதை நாமனைவரும் உணர்ந்து இவற்றை ஒழித்துக்கட்டத் திரண்டு முன்வரவேண்டும்.

'புரட்சி என்ற மகத்தான நெறிமுறையைப் புரியாமல் கொள்ளையடித்தலும், கோவில் உடைத்தலும் நாத்திகம் என்று பெருமை பேசுவதும், சோஷலிசம் என்ற சீரிய சமூகக் கோட்பாட்டுக் குரித்தான செயல்களல்ல. இளைஞரின் இணையற்ற தியாகத்தை நிர்மூலமாக்கும் நிட்டூர செயல்கள் இவை.

மரம் பூரித்துப் பெருத்து விண்ணை நோக்கி விரைவாக வளரும்போது அதன் சத்தில் உயிர்வாழும் குருவிச்சை தழைத்து வருவதை நாம் காண்கின்றோம்.

இன்று மாற்றானுக்கு உதவும் வகையில், நட்பு நாடுகள் எங்கள் போராட்டத்தில் அவநம்பிக்கை கொள்ளும் அளவிற்கு உழைப்பில் உயிர்வாழத் தெரியாத 'குருவிச்சை'கள். எங்கள் உள்வீட்டுப் பகைவர்கள். இந்த அடாத்தான செயல்களில் தொடர்வது வெண்ணெய் திரண்டுவரும் வேளையில் தாழி உடைந்த கதையைப் போன்றது.

தமிழ் மக்கள் அனுபவித்துவரும் இன்னல்கள் கொஞ்சம் நஞ்சமா? இதற்கொரு தீர்வு என்பது முன்னுரிமை பெறவேண்டும். வீண் வாய்ப் பேச்சு ஏமாற்றத்தில் முடிந்ததை மறவாது தீர்க்கமான இறுக்கமான முடிவுக்கு இந்தியா துணை நிற்க, தோல்விக்கு இடமளிக்கும் எவ்வித தீய செயலையும் தவிர்ப்பது எமது தலையாய கடன்.

## திருவிழாவும் கோபுர கும்பாபிஷேகமும்

(யாழ்ப்பாணம்)

நாயன்மார்கட்டு ஸ்ரீ அரடிப் பிள்ளையார் கோவில் அலங்கார திருவிழா நேற்று ஆரம்பமாகியுள்ளது. 23-ந் திகதி சனிக்கிழமை வரை நடைபெறும் இவ்விழாவில் யாழ். சைவ சமய அபிவிருத்திக் கழகமும், அகில இலங்கைத் திருமுறை மன்றமும் பஜனை, சொற்பொழிவு என்பனவற்றிற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளன.

## "வடபகுதி குழப்பத்துக்கெதிராக செலவிடும் பணத்தில் அங்குள்ள காணிகளை வாங்கலாம்!"

### புல்ட் ஜென்ஸ் யோசனை

(கொழும்பு)

''வடபகுதிக் குழப்ப நிலையைக் கட்டுப்படுத்த கோடிக்கணக்கான பணத்தை செலவிடுவதைக் காட்டிலும் அப்பணத்துக்கு அப்பகுதியின் காணிகளை வாங்கி அங்குள்ள மக்களுக்கும் நஷ்டஈடு வழங்கலாம்'' என்று பேராசிரியர் ரால்ப் புல்ட்ஜென்ஸ் நகைச் சுவையாகக் குறிப்பிட்டுள்ளார்.

மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் 'இலங்கை இனப்பிரச்னையும் இந்தியாவின் தொடர்பும்' என்ற தலைப்பில் உரையாற்றிய போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

பேராசிரியர் புல்ட்ஜென்ஸ் மேலும் பேசியதாவது: ''வடபகுதிக்குழப்ப நிலையைக்கட்டுப்படுத்த அரசாங்கம் நாளொன்றுக்கு 100 லட்சம் ரூபாவைச் செலவிட்டு வருகின்றது. இச்செலவை இருவாரங்களுக்கு நிறுத்தினால் 14 கோடி ரூபாவை நாம் மீதப்படுத்தலாம்.

இதன் மூலம் யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள அனைத்து நிலங்களையும் வாங்குவதுடன் அங்குள்ள மக்களுக்கும் அதற்கான நஷ்டஈட்டை வழங்கமுடியும்'' என்றார். பேராசிரியர் இதனை ஒரு நகைச்சுவையாகவே குறிப்பிட்டார்.

### ஆக்கிரமிப்பு இல்லை

அவர் தொடர்ந்து பேசியதாவது;

இந்தியா எமது பிராந்தியத்தில் ஒருபெரும் பலம்மிக்க நாடாக இருக்கின்றது. இந்த உண்மையை எமது வெளிநாட்டுக்கொள்கை வகுப்பாளர்கள் நன்கு அறியவில்லை.

## அமெரிக்கா உதவிக்கு வரும் என்பது இந்த ஆண்டின் 'ஜோக்'

இந்தியா எமது ஓரேயொரு அயல்நாடாகவும் இருக்கிறது. எனவே அந்நாட்டில் ஏற்படும் மாற்றங்களை நாம் நன்கு கொள்ளஅறிந்து வேண்டும்.

இந்தியா இலங்கையை ஆக்கிரமிக்கும் என்பது முற்றிலும் தவறான கருத்தாகும் இலங்கைப்பிரச்னையில் அது தலையிடலாம். ஆனால் எந்த விதத்திலும் அத்தலையீடு ஒரு ஆக்கிரமிப்பாக இருக்காது

இக்கட்டத்தில் அமெரிக்கா எமக்கு உதவியளிக்குமென்று எதிர்பார்ப்பது இந்த ஆண்டின் ஒரு 'ஜோக்'ஆக இருக்கும்.''

### ஜே. ஆர். ரஷ்ய விஜயம்

பேராசிரியர் புல்ட்ஜென்ஸ் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்யவிருப்பதையும் வரவேற்றார்.

இது பற்றி அவர் தெரிவித்ததாவது: 'ஜே ஆர். சோவியத் செல்லவிருப்பது விரும்பத்தக்கதாகும். அங்கு அவர் சோவியத் தலைவர்களைச் சந்திப்பதன் மூலம் இந்தியாவின் மிகப்பெரும் நட்புநாடொன்றைச் சந்திக்கும் சந்தர்ப்பத்தைப் பெறுவார்,

இலங்கையின் பொருளாதாரக்கொள்கை இந்நாட்டை வெளிநாடுகளில் பெருமளவு தங்கியிருக்கச் செய்கிறது. இதனால் இலங்கை இனப்பிரச்னையில் வெளிநாட்டுத் தலையீடு இருப்பது தவிர்க்கமுடியாததாகும்.

### உறுதியில்லை

இனப்பிரச்னை பற்றிக் குறிப்பிட்ட அவர், தமிழ்த் தலைவர்களிடம் உறுதியான கொள்கைகள் இல்லாதிருந்ததாலேயே தற்போதைய இனப்பிரச்னை மேலும் அதிகரித்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இலங்கை இனப் பிரச்னைக்கு தகுந்த தீர்வை இலங்கையிலேயேகாணாமல் இந்தியாவில் இருந்துகொண்டு இப்பிரச்னையை ஒரு பரந்த வெளியுறவுப் பிரச்னையாக்குகின்றார்கள்''

''தற்காலிக சமாதானம் ஒன்று அமைதியான ராஜதந்திர நடவடிக்கைகள் மூலம் அவசியம் தற்போது ஏற்படுத்தப்படவேண்டும். இனப்பிரச்னைக்கு தகுந்த தீர்வு தற்போது காணப்படாவிட்டால் அப்பிரச்னை மேலும் விரிவடைந்து கொண்டே செல்லும்'' என்றார். (கி)

## 'தேவிதோத்திரம்' வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தேவிதோத்திரம் என்னும் நூல் தேவி மகாமித்யத்திலிருந்து தொகுக்கப்பெற்று பேராசிரியர் கைலாசநாதக் குருக்களால் பரிசோதிக்கப்பட்ட பின் அகில இலங்கைத் திருமுறை மன்றத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நூல் வெளியீட்டை இம்மாதம் 10-ம் திகதி வண்.வீரமாகாளி அம்பாள் ஆலயத்தில் நடைபெற்ற துர்க்கா ஹோம பூர்த்தியின் போது யாழ். பிரஜைகள் குழுச் செயலாளர் திரு. இ. பாலசுப்பிரமணியம் வெளியீட்டை நிகழ்த்தி உரையாற்றினார் ஆலயகுருக்கள் சிவஸ்ரீ செல்வராசா (காந்தி ஐயா) விசேடபிரதிகளைப் பிரமுகர்களுக்குவழங்கினார். (ப)

## தவக்காலத்தின்



## 29-ம் நாள்

''அவன் யேசு சொன்ன வார்த்தையை நம்பிப் புறப்பட்டான்''

[அருள்;4/50]

இறைவனை நம்பினார் கெடுவதில்லை, விசுவசிப்பவர் அழிவதில்லை, இது தான் கிறீஸ்துவின் படிப்பினையும் கூட கிறீஸ்துவின் வார்த்தைகளை நம்பிச் சென்ற அரச அலுவலன் மகன் குணமடைவதைக் காண்கிறோம்.

புதுமைகளைச் செயலாற்ற முன்னர் கிறீஸ்து சுகம் பெறுவதற்கு இன்றியமையாத விசுவாசம் இருக்கின்றதாவென்று பலமுறை பரீட்சித்தாரென்று நற்செய்தி சொல்கின்றது. உயிருள்ள விசுவாசமே கிறீஸ்தவனை கிறீஸ்துவோடு இணைக்கும் பொருள்

நான் விசுவாசத்தில் வாழ்கின்றேனா? கிறீஸ்துவை ஏற்றுக் கொள்கின்றேனா? அதாவது வார்த்தைகள் எனக்கு ஆவியும் உயிரும் என்பதை நான் விசுவாசிக்கின்றேனா? வரங்களும், புதுமைகளும், சுகங்களும் நமக்குத் தேவையேற்படும். பொழுது மாத்திரமல்ல என்றும் நான் கிறீஸ்துவில் உயிருள்ள விசுவாசம் வைத்து வாழவேண்டும்.

இறைவா நான் உம்மை விசுவத்து ஏற்றுக் கொள்கின்றேன். என்னைக் கைவிட்டு விடாதேயும்.

அருட் திரு ம. போல் நட்சத்திரம் அ. ம. தி.

## பனை அபிவிருத்தி சபை பனம்பழப், பானம் தயாரிப்பு

(கல்வியங்காடு)

பனை அபிவிருத்திச் சபை நீண்டகால இடைவெளியின் பின் தமது சொந்த தொழிற் சாலையில் 'பனம்பழப்பானம் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளது.

இதற்கான முதலீடு மிகவும் குறைவாகவே போடப்பட்டுள்ளதாகவும் காலப்போக்கில் விஸ்தரிக்கும் திட்டம் உள்ளதாகவும் இச்சபையின் பொதுமுகாமையாளர் கலாநிதி ஆ. மோகனதாஸ் தெரிவித்தார்.

சந்தைக்கு விற்பனைக்கு வந்துள்ள இப்பனம்பழப் பானம்' மிகமலிவு விலையில் விற்கப்படுகிறதாம்.

பனந்தொழில்களை செய்யும் தனியாரிடமிருந்து பனங்கட்டி ஓடியல், புழுக்கொடியல் என்பனவற்றை பனை அபிவிருத்திச்சபை வாங்க முன்வந்துள்ளதாகவும் முகாமையாளர் தெரிவிக்கிறார்.

சிறு கைத்தொழிலாளர்களை பனை அபிவிருத்திச்சபை வரவேற்கிறது.

## அனாதரவான சிறுமி ஆச்சிரமத்தில்

[புலோலி]

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம வீதியில் அனாதரவாக நின்ற ஏழுவயதுச் சிறுமி 'கலா' வதிரி பரமானந்தா ஆச்சிரமத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை காலை இச்சிறுமி அனாதரவாக ஆச்சிரம வீதியில் நின்றபொழுது சுவாமி சித்ரூபானந்தா கண்டு இச் சிறுமிக்கான உடனடிப் பராமரிப்புக்காக ஒருவரிடம் ஒப்படைத்திருந்தார் பின்னர் அனாதரவான இச்சிறுமி பற்றி இப்பகுதி கிரமசேவை அலுவலரின் கவனத்திற்குக் கொண்டு வந்து பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு வை. வேலும்மயிலும் அவர்களின் ஆலோசனையின்பேரில் இச்சிறுமி தற்போது வதிரி பரமானந்தா ஆச்சிரமத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# மண்டைதீவு சம்பவம்: கொலை எனத் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு சீவரத்தினம் வர்ணலிங்கத்தின் மரணம் கொலையெனத் தீர்ப்பு அளிக்கப்பட்டது.

யாழ். மேலதிக நீதவான் கே. பி. எஸ். வரதராசா மரண விசாரணை நடத்தினார்.

விசாரணை முடிவில் கொலை எனத்தீர்ப்பளித்து 9 சந்தேக நபர்களையும் கைதுசெய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (க)

## யாழ். ஆஸ்பத்திரியில்

# நான்கு நாட்களாக இருக்கும் சடலம்

[யாழ்ப்பாணம்]

மலையகத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரின் சடலம், உறவினரின் வருகைக்காக கடந்த 4 தினங்களாக யாழ். ஆஸ்பத்திரி சவச்சாலையில் காத்திருக்கிறது.

கொக்குவிலில் வசிக்கும், கிரிலப்பனைத் தோட்டத்தைச் சேர்ந்த பரமன் செல்வபெருமாளின் (24 வயது) சடலமே ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. யாழ் மரணவிசாரணை அதிகாரி க. கேசவன் மரணவிசாரணை நடத்தினார். திருநெல்வேலியிலுள்ள தேநீர் கடையொன்றில் 4 வருடங்களாக பணியாற்றிய இவர், சம்பவதினம் காலை கடைமுதலாளியிடம் லீவு கேட்டுச் சென்றதாகவும், பின் சேட் அணிந்துவந்ததாரென்றும், விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் கடைக்கு பின்னால் 'சாகப்போகிறேன்' என சக பணியாளிடம் கூறிவிட்டு நச்சுத் திராவகம் அருந்தினாரென்றும் தெரிவிக்கப்பட்டது.

விசாரணையின் பின் தற்கொலை எனத் தீர்ப்பளித்த மரணவிசாரணை அதிகாரி சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்க சவச்சாலையில் வைக்குமாறு பணித்துள்ளார். (க)

## இடமாற்றம்

(சுண்டுக்குளி)

யாழ். சமூக சேவைப் பகுதியில் எழுதுவினைஞராகக் கடமையாற்றிய செல்வி வி. கமலேஸ்வரி இம்மாதம் 1-ம் திகதி தொடக்கம் கிளிநொச்சி அரச செயலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## ஓய்வுபெறுகிறார்

(புலோலி)

பருத்தித்துறை தும்பளையைச்சேர்ந்த ஆசிரியர் திரு பொன்னம்பலம் வேலாயுதம் 34 வருட ஆசிரியசேவையிலிருந்து கடந்த 1ம் திகதி தொடக்கம் ஓய்வுபெற்றுள்ளார்.

ளார்.

அனுராதபுரம் மாவட்டத்தில் 15 வருடங்களும் யாழ் மாவட்டத்தில் 19 வருடங்களும் சேவையாற்றியுள்ளார்

இவரின் சேவையைப்பாராட்டி வித்தியாலய அதிபர் திரு எஸ். சிவஞானசுந்தரம் தலைமையில் வித்தியாலய ஆசிரியர்களும், மாணவர்களும் சேவைநலன்பாராட்டு விழாவொன்றைநடாத்தினர்.

## விலைகளைக் கூட்டி விற்றனராம்

(சுண்டுக்குளி)

யாழ். நகரில் உள்ள ஒரு போசனசாலையில் 2 ரூபா 9 சதம் விற்பனை செய்யவேண்டிய 'பன்ரா' குளிர்பானத்தைப் 10 சதம் கூட்டி 3 ரூபாவிற்கு விற்பனை செய்தபோது யாழ். உள்நாட்டு வியாபாரப் பகுதியினரால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டுள்ளது

அதே தினத்தில் 8 ரூபாவிற்கு விற்கவேண்டிய பிஸ்கட் பைக்கற் ஒன்றை 8 ரூபா 50 சதத்திற்கு விற்பனை செய்த வியாபாரி ஒருவரும் விலைக் கட்டுப்பாட்டதிகாரிகளிடம் சிக்கிக்கொண்டார். இவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக யாழ். உள்நாட்டு வியாபாரப் பொறுப்பதிகாரி திரு எஸ். ஜேசுதாசன் கூறினார்.

## இடமாற்றம்

(சுண்டுக்குளி)

கொழும்பிலுள்ள கணக்குப் பரிசோதனைத் திணைக்களத்தில் கடமையாற்றிய திரு எஸ். அந்தோனிப்பிள்ளை இவ்வருடம் முதல் யாழ். உள்நாட்டு வியாபார திணைக்களத்திற்கு இடமாற்றம் பெற்று பிரதம லிகிதராக கடமையாற்றுகின்றார். (க)

## இலவசம்

(சுண்டுக்குளி)

நவாலி ஆரம்பசுகாதார குழுவினரும்நவாலிகிராம அபிவிருத்திச் சங்கத்தினரும் சேர்ந்து இப்பகுதியில் உள்ள வருமானம் குறைந்த அதிக பிள்ளைகளையுடைய குடும்பங்கட்கு சிறுபிள்ளைகளை பாவிப்பதற்கென மல கூடங்கள் இலவசமாக கொடுப்பதற்கு முன்வந்துள்ளனர் இவற்றைப் பெறவிரும்புவர்கள் கிராம அபிவிருத்திச்சங்க தலைவர் திரு. உ. ந தேவிகடாட்சத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது.

## பறிக்கப்பட்டது

[பண்டத்தரிப்பு]

மனைவி, சிறு குழந்தை ஆகியோருடன் மோட்டார் சைக்கிளில் வீடு நோக்கி வந்து கொண்டிருந்த பண்டத்தரிப்பைச் சேர்ந்த வாலிபர் ஒருவரின் மோட்டார் சைக்கிள் கட்டுடையில் வைத்து இனந் தெரியாத இளைஞர்களினால் வழிமறிக்கப்பட்டு பறித்துச் செல்லப்பட்டது.

## ப.நோ. கூ. சங்க கிளையில் சோர்வு

(வண்ணார்பண்ணை)

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளை ஒன்றில் மூன்று லட்சத்து எண்பத்தாறுயிரத்துக்கு மதிகமான ரூபா சோர்வு ஏற்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இச் சோர்வு தொடர்பாக கூட்டுறவு இலாகா விசாரணை மேற்கொண்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

## அரிசி, மா விநியோகம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திற்குதற்போது அரிசி, மா போன்ற பொருட்கள் போதியளவு விநியோகிக்கப்பட்டுள்ளது. இதனால் முல்லைத்தீவுப் பகுதிக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரிசி, மா, சீனி போன்ற அத்தியாவசிய பொருட்கள் முல்லைத்தீவு மாவட்ட உதவி உணவு கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்டுள்ளது இத் தகவலை முல்லைத்தீவு மாவட்ட உதவி உணவுக் கட்டுப்பாட்டாளரும், முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளருமான திரு சி. முருகேசம்பிள்ளை தெரிவித்தார்.

## தெல்லிப்பழையில் தபால் சேவை இல்லை

[மாவிட்டபுரம்]

தெல்லிப்பழை தபால் நிலையம் மூடப்பட்டு 2 மாதமாகின்ற போதும் அதனை மீண்டும் திறப்பதற்கான ஏற்பாடுகள் எதுவும் செய்யப்படாமையால் மக்கள் பெரிதும் கஷ்டமுறுவதாக புகார் கூறப்படுகிறது.

தெல்லிப்பழை தபால் நிலையம் மேலதிகாரிகளின் உத்தரவின் பேரில் கடந்த 2 மாதத்திற்கு முன் பூட்டப்பட்டு அதன் அலுவல்கள் நிறுத்தப்பட்டன

இத்தபால் நிலையத்தை மீண்டும் திறப்பதற்கான ஏற்பாடுகள் எதுவும் மேற்கொள்ளப்படாமையால் மக்கள் தொடர்ந்தும் பெரிதும் கஷடமுறுவதாக கூறப்படுகிறது.

## இலவச வைத்திய சிகிச்சை

[புலோலி]

பருத்தித்துறை லயன்ஸ் கழகம் சுவாமி இராமகிருஷ்ணரின் 150 வது ஜனன தினத்தையொட்டி பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் ஏழைகளுக்கான இலவச வைத்திய சிகிச்சை முகாமொன்றை நடாத்தியது.

பருத்தித்துறை லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் எம் கே முருகானந்தன் தலைமையில் நடைபெற்ற இவ் இலவசவைத்திய சிகிச்சை முகாமிலே 60 ஏழை நோயாளிகள் வைத்திய சிகிச்சைகளைப் பெற்றுக்கொண்டதாக சுவாமி சித்ரூபானந்தா தெரிவித்தார்.

# மன்னாரில் பல பாடசாலைகள் மூடவேண்டிய நிலை

(மன்னார்)

மன்னாரிலிருந்து ஆயிரக்கணக்கான தமிழ்மக்கள் அகதிகளாக இந்தியா சென்று கொண்டிருப்பதைத் தொடர்ந்து மன்னாரில் பல பாடசாலைகள் மூடவேண்டிய நிலைமை உருவாகிவருவதாக கூறப்படுகிறது

மன்னாரில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவங்களைத் தொடர்ந்து அப்பகுதி தமிழ் மக்கள் அகதிகளாகத் தங்கள் பிள்ளைகளுடன் செல்வதால் பாடசாலைகளில் மாணவர்களின் தொகை வெகுவாகக் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

சில பாடசாலைகளில் ஆசிரியர்கள்கூட அங்கு நிலவும் பதட்டநிலையால் சமுகமளிப்பதில்லை என்றும் கூறப்படுகிறது.

சிலபாடசாலைகளில் ஆசிரியர்கள் மாத்திரம் இருக்கின்றனராம்.

800 மாணவர்கள் படிக்குப் பாடசாலைஒன்றில் சுமார் 50 மாணவர்களும், 750 மாணவர்கள்படிக்கும் பாடசாலையில் சுமார் 40 மாணவர்களும் சமுகமளிப்பதாகச் தெரிவிக்கப் பட்டுள்ளது. (மா)

## வழங்கப்படவில்லை

[புங்குடுதீவு]

மன்னார் மாட்டத்திலுள்ள 1982-ம் கா. பொ. த [சாதாரண] மாணவர்களுக்கு வழங்கப்படவேண்டிய புலமைப் பரிசில்கள் இன்னும் வழங்கப்படவில்லையென கூறப்படுன்றது.

# பத்து நாட்களில் பிறப்புப்பத்திரம்

(வண்ணார்பண்ணை)

அவசர தேவைக்கு பிறப்பு, இறப்பு, திருமணப்பதிவுப் பத்திரங்களின் பிரதிகளுக்கு விண்ணப்பித்தவர்கள் உடனடித்தேவைக்கான அத்தாட்சிப் பத்திரங்களைக் காட்டியபின்னரே உடனடி வழங்கல் உத்தரவு பிறப்பிக்கப்படும். என்று யாழ் மாவட்டபிறப்பு இறப்பு பதிவாளர். திரு. எஸ். இராசையா தெரிவித்தார்

பிறப்பு இறப்புப்பத்திரங்கள் பெறுவதில் முன்னர் இருந்துவந்த தடைகள், தாமதங்கள், சிரமங்கள் தற்பொழுது ஒழிக்கப்பட்டு விட்டதாகவும்.

விண்ணப்பதாரர்களுக்குப் பத்துத் தினங்களில் உரிய பத்திரங்கள் கிடைக்கத்தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அவசிய தேவையற்றவர்களும் உடனடி தேவைக்கான விசேட உத்தரவைப் பெறுவதற்கு முயன்றுவருவதைக் குறைப்பதற்கும். அத்தாவசிய தேவைகளுக்கு விசேட வழங்கல் உத்தரவு பிறப்பிப்பதற்கும் வசதியாகவே தேவை அத்தாட்சி கோரப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

# "சமுதாய வளர்ச்சியில் ஆசிரியர்களின் முக்கியத்துவம்"

(மாவிட்டபுரம்)

"ஆசிரியர்கள் கற்பித்தலுடன் தமது கடமை முடிந்துவிட்டது என்று நினைக்காமல் பாடசாலையின் அபிவிருத்தி, மாணவர்களின் முன்னேற்றம், சமுதாயத்தின் மறுமலர்ச்சி ஆகியவற்றில் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும். ஆசிரியர்கள் சமூகத்தின் வழிகாட்டிகளாக விளங்க வேண்டும் இந்த இலட்சியங்களின் அடிப்படையில் பணி புரிந்த ஆசிரியர் ஒருவருடைய சேவையை இழப்பது நமக்கு பெரும் நஸ்டமாகும்",.

இவ்வாறு வீமன்காமம் மகா வித்தியாலய ஆசிரியராக இருந்து ஒய்வுபெற்றுள்ள திரு. கு. கந்தையாவுக்கு வித்தியாலயத்தில் அளிக்கப்பட்ட பிரிவுபசார விழாவிற்கு தலைமை தாங்கி பேசிய வித்தியாலய அதிபர் திரு. மு. சிவராசா கூறினார்.

அவர் பேலும் பேசுகையில் "பெற்றூர், ஆசிரியர்கள். மாணவர்கள் ஆகிய சகலரினதும் நன்மதிப்பைப் பெற்றவர் திரு கந்தையா ஆசிரியர்என்று குறிப்பிட்டார்.

## 8-வது மாடியிலிருந்து

# போத்தலை நிலத்தில் போட்டவருக்கு 2 மாதச்சிறை

(சிங்கப்பூர்)

எட்டாவது மாடியிலிருந்து போத்தல் ஒன்றை கீழே போட்ட ஒருவருக்கு சிங்கப்பூர் நீதிமன்றம் 2 மாத சிறைத் தண்டனை விதித்துள்ளது.

ஓங் கிங் வான் என்ற 56 வயது நபர் தாம் குடியிருக்கும் மாடி வீட்டின் 8வது மாடியிலிருந்து போத்தல் ஒன்றைதவறுதலாக கீழேபோட்டுவிட்டார். இக்குற்றம் சம்பந்தமாக அவர் மீது தொடரப்பட்ட வழக்கில் மேற்படி நபருக்கு 2 மாதச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இத்தண்டனையை வழங்கிய நீதிபதி இத்தகைய கவனக் குறைவுகளுக்கு தகுந்த தண்டனை வழங்கப்படும் என்றும் எச்சரித்தார். (இ)

## தீவைப்பு

(வவனியா)

மன்னார்றோட்- கன்னாட்டி என்ற இடத்தில் நடந்த அசம்பாவிதத்தின் போது ஏற்பட்ட தீவைப்பு சம்பவத்தில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா நஸ்டம் ஏற்பட்டுள்ளதாக வடபிராந்திய இ. தொ. கா. பொறுப்பதிகாரி திரு பி. மதுரப்பிள்ளை தெரிவித்தார்.

கன்னாட்டியில் ஆறு பேர் துப்பாக்கி சூட்டுக்கு பலியாகியுள்ளார்கள் என்ற தகவலும் கிடைக்கப் பெற்றுள்ளது.

சேமமடு மாளிகை என்ற இடத்தில் ஐந்து வீடுகள் தீக்கிரையாக்கபபட்டுள்ளது அத்துடன் மேலும இங்கு சில இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்றும் கூறப்படுகிறது.

## ரூபா 70,000 காசுக் கட்டளைகள் தேக்கம்

[பண்டத்தரிப்பு]

கடந்த ஜனவரி மாதம் 25-ம் திகதி தொடக்கம் கொள்ளைச் சம்பவங்களின் காரணமாக மூடப்பட்டிருக்கும் பண்டத்தரிப்பு தபால் அலுவலகததில் 70 ஆயிரம் ரூபா பெறுமதியுள்ள பொதுமக்களின் காசுக் கட்டளைகள், மணி ஓடர்கள் மாற்றிக் கொடுபடாது தேங்கிக்கிடக்கிறது.

இத்தகவலை பண்டத்தரிப்பு தபால் அலுவலக விழிப்புக்குழுவின் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில், பண்டத்தரிப்பு தபால் அதிபர் திரு. சரவணமுத்து தெரிவித்தார்.

## கட்டிடவேலை மீண்டும் ஆரம்பம்

(சுழிபுரம்)

வழக்கம்பரையில் எட்டு லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட நவீன கடைகள், அலுவலகங்கள்கொண்ட இரு மாடிக் கட்டிடம் பூர்த்தியாகாது தடைப்பட்டிருந்தது. நீண்டகால இடைவெளிக்கு பின்னர் மாவட்டசபை நிதி ஒதுக்கீட்டைக்கொண்டு மிகுதி வேலைகளை செய்து பூர்த்தியாக்கும் பணியை சுழிபுரம் உப அலுவலகத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

## பிரஜைகள் குழு

(கோப்பாய்)

பத்தமேனி - இடைக்காடு பகுதிக்கான பிரஜைகள் குழுவின் நிர்வாகிகள் வருமாறு:

தலைவர்; திரு. ஏ. என். இராசேந்திரன், துணைத்தலைவர்கள்: திரு. எஸ். சுந்தரலிங்கம், திரு.ஏச் செல்லையா, செயலாளர் திரு ச. க. ஆறுமுகம், துணைச்செயலாளர் திரு. செ. சிவப்பிரகாசம், பொருளாளர்: திரு. தா. சிவலிங்கம்.

நிர்வாகக்குழு உறுப்பினர்கள் 14 பேரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

# ‘கடத்தப்பட்ட சில வாகனங்கள் கிடைத்ததற்கு நன்றி!

## எஞ்சியவற்றையும் ஒப்படையுங்கள்’

## யாழ். மாநகர ஆணையாளர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

கடத்தப்பட்ட யாழ் மாநகர சபையின் சில வாகனங்கள் மீண்டும் பெறப்பட்டமைக்கு நன்றிதெரிவிக்கும் அதேவேளை "மில் எஞ்சியிருக்கும் வாகனங்களையும் எம்மிடம்ஒப்படைக்குமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்''

யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

பன்னெடுங்காலமாகதேவையென்று உணரப்பட்டு வந்த தீயணைக்கும்படை ஸ்தாபிக்கும் திட்டம், பொதுமக்களிடமிருந்து சேகரித்த நிதியுடனும், கனேடிய உயர் ஸ்தானிகரின் உதவியுடனும் ஐக்கிய இராச்சியத்திலிருந்து கொள்வனவுசெய்யப்பட்ட தீயணைக்கும் இயந்திரம் கொழும்புத் துறைமுகத்தில் இருந்து அகற்றப்பட்டு மாநகராட்சி மன்றத்தின் பெயரில் பதிவுசெய்யப்பட்டு இங்கு கொண்டுவரப்படவேண்டிய நிலையிலுள்ளது.

இதற்காகிய வீதி அனுமதிப்பத்திரம் போன்றவை பெறுவதில் பாதுகாப்பு பற்றிய பிரச்னை எழுந்துள்ளது. எமது வாகனங்கள் சில கடத்தப்பட்டதின் காரணமாக தீயணைக்கும்படையை மாநகராட்சி மன்றத்தினுல் பாதுகாக்கமுடியுமா என்ற கேள்வி பாதுகாப்பு வட்டாரங்களிலிருந்து எழுப்பப்பட்டுள்ளது. எல்லாதரப்பு மக்களினதும் ஒத்துழைப்புடன் அதை பாதுகாக்கமுடியுமென்று நாம் கூறியிருப்பதை பகிரங்கப்படுத்தி, சகலரினதும் ஒத்துழைப்பு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பிலேயே அப்படி கூறப்பட்டதைக் கருத்திற்கொண்டு அதற்காகிய ஒத்துழைப்பையும் ஒத்தாசையையும், பாதுகாப்பையும் வழங்க வேண்டுமென்று கோருகின்றோம்.

### சுகாதார சேவைகள்

நாளாந்தம் சுமார் 13 டிரக்டர்கள் மூலம் தலா 3 நடை என்ற அடிப்படையில் 39 நடை குப்பைகள் அகற்றப்பட்டுவருவது வழக்கம் எரிபொருள் தட்டுப்பாடுகள் வேலைநேர மட்டுப்பாடுகள் போன்றவைகளினுல் மட்டுப்படுத்தப்பட்டிருந்த சுகாதார சேவை வாகனங்கள் கடத்தப்பட்டதினுலும் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. தற்போதைய சூழ்நிலையில் 4, 5 டிரக்டர்கள் மூலம் சேவை செய்யவேண்டிருப்பதால் நாளாந்தம் 8 அல்லது 10 நடை குப்பைகளை அகற்றக்கூடிய நிலை இருப்பதனுல் பல பகுதிகளிலும் குப்பை கூழங்கள் தேங்கிக் கிடப்பதும் நீங்கள் எல்லோரும் அறிந்ததே. இதனுல் ஏற்படக்கூடிய சுகாதாரசேவை பாதிப்புக்களையும் நீங்கள் எல்லோரும் உணர்வீர்கள். எனவே நகர மக்களினது நலன்கருதியும் இந்த விடயத்தில் சகலரும் ஒத்துழைக்க வேண்டுமென்று நியாயபூர்வமாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

வாகனக்கடத்தல் காரணமாக சுப பல்வேறு சேவை மந்த நிலைகளையும் நிர்வாகம் எதிர்நோக்கவேண்டியுள்ளது என்பதையும் இதனுல் பொதுமக்கள் பாதிப்படையாமல் இருக்க வேண்டுமென்பதையும் நாம் கருத்திற்கொண்டு எடுக்கும் முயற்சிக்கும் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றோம். அத்துடன் தத்தமது வளவுகளில் புதைக்கக்கூடிய குப்பைகளை அப்படியே புதைக்குமாறு தயவுடன் கோருகிறோம்.

### மல சுத்திகரிப்பு சேவை

பலகாலமாக தொடர்ந்திருக்கும் வாளி மலகூடங்களை நாம் மாற்றியமைக்க நடவடிக்கையெடுதததும், உதவிகள் வழங்கியும், கரையோரப் பிரதேசங்களில் அப்படி மாற்றியமைக்கமுடியாமலிருப்பதால் அவற்றை ‘யுனிசெவ்’ திட்டத்தின் மூலம் பொதுக்குழிகள் நிர்மாணித்து நீரடைப்பு மலகூடங்களாக மாற்றவும் முயற்சியெடுத்து வருகிறோம். இருப்பினும் சுமார் 30, 40 வருடங்களாக கொழும்புத்துறைப் பகுதியிலுள்ள மாநகராட்சி மன்றத்திற்குச் சொந்தமான இடுகாட்டிலும், தென்னந்தோட்டங்களிலும். தென்னந்தோட்டங்களுக்கு அருகாமையிலுள்ளகடலோரப் பகுதிகளிலும் புதைத்து வந்தோம் ஆனுல் அண்மைக் காலததில் குறிப்பாக இடுகாட்டுப்பகுதியில் அத்துமீறிக் குடியேறியவர்கள் எம்முடைய மல சுத்திகரிப்பு மனிதக்கழிவுகளை புதைப்பதற்கு ஆட்சேபனை தெரிவிக்கும் காரணத்தினுல் இதை எந்த இடத்திலும்புதைக்கமுடியாத ஒரு இக்கட்டான சூழ்நிலை உருவாகியிருக்கிறது

இம்மாநகராட்சி மன்றத்தில் சுமார் 1300க்கும் மேற்பட்ட ஊழியர்கள் கடமையாற்றுகின்றனர். அவற்றுள் சுமார் 950 பேர் வரை தொழிலாளர் தரத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுள் 35 வீதமானவர்கள் கையெழுத்துப் போடக் கூட முடியாத நிலையில் உள்ள நகர சுத்தி, மலசுத்தி தொழிலாளர் தரத்தைச் சேர்ந்தவர்கள். இந் நிலையில் அரசாங்க இலாகாக்கள் செயற்படுவது போல காசோலை மூலமாகஎல்லாருக்கும் சம்பளத்தை வழங்கினுல் நமது சமூகத்தின்அடித்தளத்திலிருக்கும் இவர்கள் எவ்வளவு கஷ்டத்தை அனுபவிப்பார்கள் என்பதை நாம் எல்லோரும் சிந்திக்கவேண்டும். காசோலை வழங்கும்போது வங்கி செல்ல முடியாத நிலையில், வர்த்தகர்களின் உதவியை நாடி நிற்பதும், அவர்கள் அதற்குப்பணப் என்று அறவிடுவதும், அரைவாசி கால்வாசி என்ற முறையில் காசோலைகருரியபணத்தை வழங்குவதும், சிலசமயங்களில் தமது வியாபார ஸ்தாபனங்களிலேயே பொருட்களைகொள்வனவு செய்யவேண்டும் என்று நிர்ப்பந்திப்பதும்கூடியவிலைக்கு பொருட்களை விற்கும் நிலையும் உருவாகும். இவற்றைத் தவிர்க்கவே நாம் பணமாக சம்பளத்தைக் கொடுக்க முயற்சிக்கிறோம்.

### வீதி பராமரிப்பு

யாழ். மாவட்டத்திலுள்ள வீதிகள் பராமரிப்பு பாதுகாப்பு காரணங்களுக்காக இடை நிறுத்தப்பட்டபோதிலும் நவம்பர் 84 ஆரம்பத்தில் நாம் அப்போதிருந்த பாதுகாப்பு சேவைகள் இணைப்பு அதிகாரியைச் சந்தித்து மாநகரசபை எல்லைக்குள் இருக்கின்ற வீதிகளை அவர்களுக்கு முன் அறிவித்தல் வழங்கி பராமரிப்பதற்கான ஒப்புதலைப் யெற்று சிலவீதிகளை திருத்தி அமைத்தோம். எனினும் பாதுகாப்பு வலயம், வாகன போக்குவரத்து கட்டுப்பாடு ஆகியவை சம்பந்தமான அவசரகால விதிகளின் காரணமாக கல், மண் போன்றவைகளை விநியோகிக்க முடியாத நிலையில் ஒப்பந்தகாரர்கள் இருந்ததினுல் டிசம்பர் 84 லிருந்து வீதிகளை பராமரிக்க முடியாதிருந்தது.

எனினும் தற்போதைய நிலையில் வாகனங்களுக்கான அனுமதிப் பத்திரங்களை பெற்று கல், மண் போன்றவை விநியோகிக்கக்கூடிய நிலை ஒப்பந்தக்காரர்களுக்கு இருப்பதாலும், மாநகராட்சி மன்றத்தின் பல தொழிலாளர்கள் மாதாந்த வேதனம் பெற்றும் பூரணமாகவேலை செய்யாது இருப்பதாலும் அவர்கள் மூலமாகவே இந்த முக்கிய வீதிகளை பராமரிப்புச் செய்வதற்கான நடவடிக்கையெடுத்து வருகின்றோம். அப்படி சட்டபூர்வமாக நாங்கள் வீதிவேலைகளைசெய்வதற்கு சகலதரப்பினரதும் ஒத்துழைப்பையும். உதவியையும் நாடி நிற்கிறோம்.

இம்மாநகராட்சி மன்ற நிர்வாகம் கூடுமானவரையில் எமது மக்களின் அடிப்படைத் தேவைகளை அவர்களுக்கு அசௌகரியமின்றி வழங்க முயற்சித்து வருவதையும் கருத்திற்கொண்டு எல்லோரும் எமக்குவேண்டிய ஒத்துழைப்பையும், பாதுகாப்பும் ஒததாசையும், உதவியும வழங்கவேண்டுமென்றும் மீண்டும் மிகப்பணிவோடும் அன்போடும் கேட்டுக்கொள்கிறோம். (க)

---

## இப்படி ஒரு பிரசுரம்

[யாழ்ப்பாணம்]

''நமக்குள்ளும் கொடுமைகள் நடைபெறவேண்டுமா?'' என்று கேட்டு துண்டுப் பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

விடுதலைத் தோழர்களே! ஈழமக்களின் சந்தேகங்களைப் போக்குங்கள்'' என்ற தலைப்பில் ‘மக்கள் அணி’ நேற்று இப்பிரசுரத்தை வெளியிட்டுள்ளது.

அப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''கொள்ளைக்காரர்களையும், காட்டிக் கொடுப்பவர்களையும் இனங்கண்டு மின் கம்பத்தில் கட்டுகிறீர்கள்.

''அண்மையில் நிர்வாண மாக்கப்பட்ட பெண்ணின் சடலம் வயலில் புதைக்கப்பட்டது எப்படி?

''12-03-85 இரவு அளவெட்டி மயானததில் மூன்று இளைஞர்களைக் கருக்கியது யார்? ஏன்?

''மக்கள் மனம் கவர்ந்த துர்க்காதேவி ஆலயகொள்ளைக்கு யார் பொறுப்பு'?'(மா)

---

## வலி-வடக்குப் பகுதியில் தபால் சேவை சீர்கேடு

(மாவிட்டபுரம்)

வலிவடக்குப் பகுதியில் கடந்தசில தினங்களாக தபால் வான் சேவை இன்மையால் தபால் சேவை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

வலி வடக்குப் பகுதியில் காங்கேசன்துறை வீதியில் உள்ள தபால் நிலயங்களுக்கு தினமும் தபால்வான் சேவை இடம்பெற்றுவந்தது. ஆனுல் கடந்த சில தினங்களாக இந்த சேவை ஸ்தம்பித்தமையால் வேறிடங்களுக்கு தபால் அனுப்பமுடியாமலும், வேறிடங்களிலிருந்து தபால் வராமலும் தபால்சேவை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் தபால்கள் சேர்க்கப்பட்டு கட்டிவைக்கப்பட்டுள்ளதாகவும் மாற்று ஒழுங்குகள் செய்யப்படும்வரை தபால்சேவை பாதிப்பாகவே இருக்குமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏனையபல இடங்களில் போக்குவரத்துச் சபை பஸ்கள் தபால்களை எடுத்துச்செல்லும் நடைமுறை இருப்பதால் இங்கும் அவ்வாறுசெய்ய ஆலோசிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

---

### ஆசிரிய கலாசாலை சான்றிதழ்கள்

## 15 வருடங்களாகியும் இன்னமும் வரவில்லை!

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலையில் பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் பலர் தமது ஆசிரிய கலாசாலை சான்றிதழ்களை இன்னமும் பெறவில்லையாம்.

1970-71, 1971-72, 1972-73, 1973-74, 1974-75 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற பரீட்சைகளில் தோற்றி சித்தியடைந்த 343 பேரின் சான்றிதழ்களில் 147 பேர் இன்னமும் தமது சான்றிதழ்களைப் பெறவில்லை. இவர்களது சான்றிதழ்கள் தற்போது பலாலி ஆசிரியர் கலாசாலையில்உள்ளது. பல்வேறு காரணங்களை கருத்தில் கொண்டு இச்சான்றிதழ்களை உரியவர்கள் உடனடியாக வந்து பலாலி ஆசிரிய கலாசாலையில் பெற்றுக்கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்

இதேவேளை 1975-76, 1976-77 1977-78, 1978 79 ஆகிய ஆண்டுகளில் கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயின்ற ஆசிரியர்களின்சான்றிதழ்களுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லையாம். இக்காலப் பகுதியில் பயின்ற சுமார் 400 பேரின் சான்றிதழ்கள் அனுப்பப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது. ஆயினும் இச்சான்றிதழ்கள் பலாலி ஆசிரியர் கலாசாலைக்கு இன்னமும் கிடைக்கவில்லையாம்.

---

## பற்றிக் ஓய்வுபெறுகிறர்

[யாழ்ப்பாணம்]

யாழ். செயலக மேலதிக அரசாங்க அதிபர் திரு. பி. எஸ் பற்றிக் சேவையிலிருந்து ஓய்வு பெறுவதையிட்டு, அவருக்கு யாழ். செயலகத்தில் பிரிவுபசாரம் ஒன்று அளிக்கப்படவுள்ளது.

திரு. பி. எல். பற்றிக் வருமானவரி இலாகாவில் லிகிதராக கடமையாற்ற ஆரம்பித்து பின்னர் காரியாதிகாரியாகவும், உதவி அரசாங்க அதிபராகவும், சேவை முடிவில் மேலதிக அரசாங்க அதிபராகவும் மக்களுக்கு சிறந்த பணியாற்றியுள்ளார்' (மா)

---

## சமாதான நீதிச்சபை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கில் பலாலி பிராம சேவகர் பிரிவில் புதிய சமாதான நீதிச்சபை அமைப்பதற்கான பொதுக்கூட்டம் கிலாலி புனித செபஸ்தியார் ஆலய முன்றலில் நடைபெற்றது.

---

## சட்டவிரோத மின்பாவனை

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை உப அலுவலக எல்லைக்குள் சட்டவிரோத மின்பாவனை அதிகரித்து வருவதால், மின் விநியோகம் முற்றுகத்தடைப்படும் அபாயம் ஏற்படலாமென தெரிவிக்கப்படுகிறது.

காங்கேசன்துறை உப அலுவலக எல்லைக்குள் சட்டவிரோதமான மின்பாவனை அண்மைக்காலமாக அதிகரித்துவருவதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக உபமின் நிலையங்கள் அவற்றின் வலுவுக்கு அதிகமான மின்சாரத்தை வழங்கநேரிடுவதால் அவை பழுதடைந்து செயலற்றுவிடும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும், அவ்வாறுன நிலை ஏற்பட்டால் மின்சாரம் முழுமையாகவே தடைப்பட நேரிடும்மெனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆதலால் சட்டவிரோத மின்பாவனையை நிறுத்தி சீரான மின் விநியோகத்திற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. வ. இராமச்சந்திரன், மின்சார அத்தியட்சகர் திரு சிவலோகநாதன் ஆகியோர் பொதுமக்களுக்கு வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

---


1 ஸ்பெயின் பிரான்ஸ் செல்வதற்கான சகல பிரயாண ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்.

2 குறைந்தசெலவில் கூடிய விரைவில் BERLIN செல்வதற்கான ஒழுங்குகளுக்கும் தொடர்பு கொள்ளவும்.

AIR-TRANSIT

ஏயார் ட்ரான்சிற் TRAVEL CONSULTANTS

99-2/56ஆB கபூர் பில்டிங்
2-வது மாடி, கொழும்பு-1
போன்: 549365

538 (290) ஆஸ்பத்திரி வீதி,
[ஆஸ்பத்திரி முன்பாக]
யாழ்ப்பாணம். போன்: 22689

# மனைவி பேசியதால் கணவன் தற்கொலை

[மாவிட்டபுரம்]
மது அருந்திய கணவனுக்கு மனைவி புத்திமதி கூறியதால் மனம் நொந்த கணவன் மூட்டைப் பூச்சி மருந்தை அருந்தி உயிரைப் போக்கிக் கொண்டார்.

காங்கேசன்துறையில்வசித்து வந்த சிவகுருநாதன் குலசேகரன் என்பவரேஇவ்வாறுமரணமானவராவார்.

இம்மரணம் குறித்து திடீர் மரணவிசாரணை அதிகாரி எஸ். சித்திரவேல் விசாரணை நடத்தினார்.

காலமானவர் 4 பிள்ளைகளுக்குத் தந்தையெனவும், அவருக்கு நெஞ்சில் வருத்தம் ஏற்பட்டிருந்ததாகவும், அவருக்கு மது அருந்தும் பழக்கமும்இருந்ததாகவும், மது அருந்துவது குறித்து மனைவி புத்திமதி கூறி மது அருந்த வேண்டாம் எனக் கேட்டதாகவும், அதனால்மனம் நொந்து மூட்டைப்பூச்சி மருந்தை அருந்தி மரணமானதாகவும் விசாரணையில் தெரியவந்தது.

தற்கொலை என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

காங்கேசன்துறை கிராம சேவையாளர் எம். நடராசா சாட்சிகளை ஆஜர் செய்தார்.

## நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)
ஆவரங்கால் சரஸ்வதி சனசமூகநிலைய நடப்புவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர்.

தலைவர் திரு. சு. நித்தியானந்தன், உபதலைவர் திரு, து. சிவராசா, செயலாளர்கள். திருநீ.மயில்வாகனம் திரு. சு. யோகநாதன். பொருளாளர். ருதி. செ. சுந்தரமூர்த்தி, கணக்காய்வாளர்: திரு. இ. தனேஸ்வரன், காப்பாளர்: வைத்தியகலநிதி ந. பாலகிருஷ்ணன்.


றீகல் மினி
தினசரி 10-15, 2-30
விஜயகாந் - நளினி நடித்த
சந்தோஷக் கனவுகள்

றீகல்
தினசரி 10-30, 2-00 மட்டும்
JUNGLE WARRIORS
கடைசிச் சந்தர்ப்பம்
இன்னும் சில தினங்களே

WINDSOR
Daily 10-30, 2-00, 4-15
The sex educational film that should not be missed by eve y adult.
கடைசி முறையாகக் காண்பிக்கப்படுகின்றது.
"The Body"

யாழ். வின்சர் மினி
தினசரி 10-30, 2-15.
ரஜனிகாந், மாதவி, சுலக்ஷண நடித்த
"தம்பிக்கு எந்த ஊரு"

ஆனந்தி வீடியோ சினிமா
[மனோகராவில்]
கமல்-மாதவி நடித்த பாலாஜியின்
சட்டம்
[கலர்]

MANOHARA
Daily 10-30, 2-51, 4-15
Muhammed Ali
in
BODY AND SOUL
(Strictly For Adults)
கண்டிப்பாக வயது வந்தவர்கட்கு மட்டும். பயங்கரச் சண்டைக் காட்சிகள் நிறைந்த படம்

லிடோ சினிமா
10-30 am, 2-00 pm, 4-00 pm
"Still of the Night"
Adults Only

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30, 2.30
சிவாஜி, கே. ஆர்.விஜயா, பிரபு நடித்த
நீதிபதி
(கலர்)


## கடத்தப்பட்ட வாகனங்களை ஒப்படைக்கவும்

(பண்டத்தரிப்பு)
தொல்புரம் கமநலசேவை நிலையத்திலிருந்து கடத்தப் பட்ட ட்ராக்டரையும் உழவு யந்திரக் கலப்பையையும் இப்பகுதி விவசாயிகளின் நலன் கருதி மீண்டும் தம்மிடம் ஒப்படைக்குமாறு சம்பந்தப் பட்டவர்களிடம் தொல்புரம் கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் திரு. பி. சூசைப்பிள்ளை உருக்கமான வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

கடத்தப்பட்ட உழவுயந்திரக் கலப்பை நிலயத்தின் சொந்த நிதியிலிருந்து 12ஆயிரம் ரூபாவுக்கு வாங்கப்பட்டது என்றும், வட்டுக்கோட்டை தொகுதியிலுள்ள விவசாயிகளுக்கு மிகவும் குறைந்த கட்டணத்தில் உழவு வேலைகளை செய்ய பயன்படுத்தப்பட்டுவந்த இந்த ட்ராக்டரையும் உழவு யந்திரக் கலப்பையையும் திரும்பவும் ஒப்படைக்குமாறும் திரு சூசைப்பிள்ளை தமது வேண்டுகோளில் மேலும் தெரிவித்துள்ளார்.

# வவனியாவில் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

(வவனியா)
வவனியா - யாழ்ப்பாணம் வீதி போயாடி கூழாங்குளம் என்ற இடத்தில் ஆனந்தன் என்ற இளம் குடும்பஸ்தர் சுட்டுக் கொலை செய்யப் பட்டுள்ளார்.

சம்பவதினமிரவு 9 மணியளவில் குறித்தநபருடைய வீட்டுக்குச் சென்ற மூன்று இனந்தெரியாத நபர்கள் இவரை அழைத்துச் சென்று சுட்டதாகத் தெரியவருகின்றது

இறந்தவருடைய குடியிருப்பு இல்லம் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. இறந்தவருக்கு மூன்று பிள்ளைகளுண்டு.

சுட்டுக் கொலைசெய்யப் பட்ட குடும்பஸ்தர் கசிப்பு வியாபாரத்தினை மேற்கொண்டிருந்தவர் என்பது தெரியவந்தது.

இதே வீட்டில் குடியிருந்த கருணா என்ற நபரும் அண்மையில் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொலைசெய்யப் பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### கடத்தப்பட்டவரை விடுவிக்குமாறு

# விழிப்புலனிழந்தவரின் உருக்கமான வேண்டுகோள்

[யாழ்ப்பாணம்]
நாவாலியில் கடந்த 9-ம் திகதி இரவு ஏ. டி. குணரத்தினம் என்பவர் சிலரால் கடத்திச் செல்லப்பட்டதாகவும், அவரை மனிதாபிமானம் கருதி விடுவிக்குமாறும் அவர் மூலம் வாழ்வு பெற்றவரான விழிப்புலனிழந்தவரான சென் ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் திரு சுப்பிரமணியம் என்பவர் உருக்கமான ஒரு வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அவர் தமது வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ளதாவது;-

1978-ம் ஆண்டு நான் பேராதனை பல்கலைக் கழகத்தில் பட்டதாரி வகுப்பில் இருக்கும் போது ஒரு விபத்தில் என் கண்பார்வையை இழந்தேன். உலகமே இருண்டு, எனக்கு உதவி அளிக்க ஒருவரும் இல்லாது நான் தத்தளித்துக்கொண்டு இருந்தபோது, மாத்தளையில் சமயத்தொண்டு செய்து கொண்டிருந்த திரு. ஏ.. டி. குணரத்தினம் என்னைத்தேடி வந்து முன்பின் அறிமுகமில்லாத எனக்கு நான் யாழ்ப்பாணம் வரவும் கண்ணிழந்தோர் கல்வியைக் கற்கவும், அதன் பயனாக யாழ் பல்கலைக் கழகத்தில் என் பட்டப் படிப்பை முடிக்கவும் உதவி செய்தார்.

இப்போது நான் நடத்தும் குடும்ப வாழ்வும், கல்வியும் குழந்தையும் இவர் எனக்கு இட்டபிச்சை என்பதை இவரை வைத்திருப்பவர்களுக்கு அறியத்தருகின்றேன்

நான் இப்போது சென் ஜோன்ஸ் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றுகிறேன். நவாலி தெற்கில் இவரது இருப்பிடத்தில் இருந்து இவர் கடத்திச் செல்லப்பட்டார் எனஅறிந்து விழிப்புலன்இழந்த என் மனைவி மங்களாராணியும் நானும் மிக அதிர்ச்சியடைந்தோம்.

எங்களைப்போன்ற எத்தனையோ திக்கற்றவர்களுக்கும் சமுதாயத்தில் கவனிக்கப் படாதவர்களுக்கும்இவர் தேடி சென்று மறுவாழ்வு கொடுத்ததற்கும் நான் சாட்சியாக இருக்கிறேன். இந்த சமயத் தொண்டருக்கு ஒரு தீங்கும் இழைக்கவேண்டாம் என்றும் என் போன்ற திக்கற்றவர்களுக்கு இவர்ஒரு மலைபோல் நின்று தாங்குகின்ற பண்பாளர் என்றும் நான் இவரை வைத்திருப்பவர்களுக்கு தாழ்மையுடன் அறிவிக்கின்றேன்'

ஏதாவது தகுந்த காரணத்தோடு இவரை வைத்திருப்பவர்கள் இவரை விடுதலை செய்யும் மனதில்லாது இருந்தால் இவர் இருக்குமிடத்திற்கு இவரின் இளம் மனைவியையும், 2 வயது மகனையும் கூட்டிச் சென்று அங்கேயே அவர்களையும் ஆயுள்காலம் முழுவதும் வைத்திருப்பது நல்லது என்பதே என்தாழ்மையான அபிப்பிராயம். மிகக்குறைந்த வசதிகளுடன் இக்குடும்பம் உங்களுடன் வசிக்கும்என நான் உறுதி கூறுகிறேன்.

[வண் திரு]

# கடன் தொல்லையால் இளைஞர் தற்கொலை

[யாழ்ப்பாணம்]
நல்லூரில் கடைநடத்திவந்த இளைஞர்ஒருவர் கடன்தொல்லையால் நச்சுத் திராவகமருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

இருபாலையைச் சேர்ந்த கணேசு தெய்வேந்திரம் (22 வயது) என்பவரே தற்கொலை செய்தவராவார்.

யாழ். மரணவிசாரணை அதிகாரி க. கேசவன் மரண விசாரணை நடத்தினார்.

'கடன் தொல்லையால் உயிரோடு இருக்க மாட்டேன்' என்று தமது மாமனாரிடம் நச்சுத் திராவகப் போத்தலைக் காட்டினாரென்றும், மாமனார் அதுபற்றி அக்கறைப்படவில்லையென்றும், மறுநாள் தோட்டத்திற்குச் செல்லும் வழியில் நச்சுத்திராவகம் அருந்தினார் என்றும் விசாரணையில் கூறப்பட்டது.

விசாரணை முடிவில் தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப் பட்டது. (க)

## விளையாட்டுப்பயிற்சி

(கோண்டாவில்)
விளையாட்டு அமைச்சின் உதவியுடன் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடாத்தப்பட்டு வரும் விளையாட்டுப் போட்டிகளைத் தொடர்ந்து நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள விளையாட்டுக் கழகங்களுக்கான எல்லே பயிற்சி முகாம் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடாத்தப்பட்டது.

இப்பயிற்சி முகாமுக்கான ஒழுங்கை நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டுப் பகுதி உத்தியோகத்தர் செல்வி க. வைத்திலிங்கம் மேற்கொண்டிருந்தார்.

## பணிப்பாளர் திறந்துவைப்பார்!

(சுன்னாகம்)
ஏழாலை சைவமகாஜனவித்தியாலயத்தில் புதிதாகஅமைக்கப்பட்டுவரும் கட்டிடம் மிக விரைவில் சம்பிரதாயபூர்வமாகத்திறந்து வைக்கப்படவுள்ளது.

இக்கட்டிட அமைப்பிற்கு சகல வழிகளிலும் உதவிபுரிந்த யாழ் பிரதேச கல்விப்பணிப்பாளர் திரு. எம் சிமியாம்பிள்ளை கட்டிடத்திறப்பு வைபவத்தில் பிரதமவிருந்தினராக கலந்துகொண்டு சிறப்பிப்பதற்கான ஏற்பாடுகளைப்பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மேற்கொண்டுள்ளது. இவ்வைபவத்தில் பிரதம கல்வி அதிகாரி திரு இ. சுந்தரலிங்கமும் கலந்து கொள்வார் என அபிவிருதி சங்கபிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

## இளம் பெண் தற்கொலை

(மட்டுவில்)
காதில் ஏற்பட்ட வியாதி காரணமாக இளப்பெண் ஒருவர் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் ஒன்று மீசாலைப்பகுதியில் நடந்துள்ளது.

சி. ஈஸ்வரி என்ற இளம் பெண் (வயது 22) இவ்வாறு தற்கொலை செய்துகொண்டவராவார்.

இவர் காதில் ஏதோ வருத்தம் இருந்ததாகவும் இவருக்குச் செவிப்புலன் கூர்மை இல்லாமையினாலும் இவர் வாழ்க்கையில் விரக்தியடைந்து பெற்றோருக்குக் கடிதம் எழுதி வைத்துவிட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

## பண்பான ஒரு கலைஞர்



பண்பாடான அந்தக் கலைஞரை அடிக்கடி நான் நினைப்பதுண்டு. அவர் மறைந்து இன்று ஓராண்டாகிவிட்ட போதிலும், அவர் நினைவுகள் சாகாமல்பசுமையாகஇருக்கின்றன.

கொழும்புக் கலைஞர்களோடு நான், நெருக்கமாகப் பழகியதுண்டு. ஆனால், யாழ்பாணத்தில் உள்ள சில கலைஞர்களிடமுள்ள உயர்ந்த பண்பை நான் கண்டதில்லை. அந்தவகையில் மிக உயர்ந்து நிற்பவர் இணுவை சிதம்பரநாதன்!

அவர் புன்னகை, சம்பீரம், அன்பு, இசை, நளினம், நடிப்பு அத்தனையும் தனித்துவம்.

கணீரென்ற குரலில் திருமுறை ஒருமுறை அவர் பாடக்கேட்டிருக்கிறேன் இப்போதுகூட என்னை மறக்கிறேன்.

நாடகத்துறையில் சாதனைகள் பல செய்யத்துடித்தவர். தானே பாடி நடிக்கும் திறமை கைவரப்பெற்ற ஒரு சிலரில் இவரும் ஒருவர்.

'ஒரே ரத்தம்', 'ஐயோ அம்மான்', 'தணியாத தாகம்', 'கயிலை வன்னியன்', 'தென்னவன் பிரமராயன்'. 'ஸ்ரீவள்ளி' ஆகிய இவரது நாடகங்களைப் பார்த்தவர்களுக்கு இவரது நடிப்பாற்றல் புரியும்.

மன்னார், யாழ்ப்பாணம், கொழும்பில் சக்கைபோடு போட்டவர்!

வில்லிசையென்றாலும் வெளுத்துவாங்குவார்.

தம்பையா சிதம்பரநாதபிள்ளை என்ற இந்தக் கலைஞரின் பிரிந்த செய்தியை அவரது அருமைப் புதல்வரும், எழுத்தாளரும், என் இனிய நண்பருமான இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் மூலம் அறிந்தபோது ஒரு விநாடி அதிர்ந்துவிட்டேன்.

சிலநாட்களுக்கு முன்னர் தான் என்னை அவர் அலுவலகத்துக்குத் தேடி வந்தார். தன் இருபெண் குழந்தைகளையும் அப்போது கூட்டிவந்து எனக்கு அறிமுகப்படுத்தினார்.

சிரிக்கச் சிரிக்கப் பேசினார்.

இணுவை சிவகாமி அம்மையின் மீது இவரது பக்தியை அப்போதுதான் உணர்ந்தேன். ''என்ன இப்போது லீவா?'' என்று கேட்டதற்கு கோயிலுக்கு லீவு என்றார்.

''சிதம்பரநாதபிள்ளை லீவு எடுப்பதென்றால் தனது ஊரில் நடைபெறும் சமய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்கு மட்டுமேயாகும்'' என்று வவனியா உதவி அரசாங்க அதிபர் திரு. குணநாயகம் சொல்வதில் எவ்வளவு உண்மை!

நெஞ்சம் மறக்காத கலைஞர் சிதம்பரநாதன்!

—ராஜகோபால்

### அரசியல் ரீதியில் ஏற்படும்

# கஷ்டத்தை நிருபித்தால் மட்டுமே மேற்கு ஜெர்மனியில் அடைக்கலம்!

## தூதுவர் நிருபர்களுக்கு விளக்கம்

(கொழும்பு)

''ஜெர்மன் சமஷ்டிக் குடியரசில் அரசியல் தஞ்சம் கோரி விடுக்கப்படும் வேண்டுகோளில் 27 வீதமானவை மேற்கு ஜெர்மனியிலிருந்து விடுக்கப்படுகின்றன. இலங்கையர்கள் மேற்கு ஜெர்மனியில் அரசியல் தஞ்சம் கோருவது இயலாத காரியம்.''

இவ்வாறு இலங்கைக்கான மேற்கு ஜெர்மன் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

''அதிகமானோர் கிழக்கு ஜெர்மன் சென்று, அங்கிருந்து சுரங்கப்பாதை வழியாக மேற்கு ஜெர்மன் செல்கிறார்கள்.

''1981-ம் ஆண்டு 13,900 பேர் மேற்கு ஜெர்மனில் அரசியல் தஞ்சம் கோரியிருந்தார்கள் 1983-ம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 6,300 ஆகக் குறைந்தது. இதற்குக் காரணம் மேற்கு பேர்லின் செனட்சபை அரசியல் தஞ்சம் கோருவோரின் விண்ணப்பங்களை நிராகரித்தமையாகும்.

''மேற்கு பேர்லின் செனட் சபை விடுத்துள்ள புள்ளிவிபரங்களின் அடிப்படையில் அரசியல் தஞ்சம் கோருபவர்களில் ஆறிலாரு பங்கினர் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவந்துள்ளது.

''இதுவரை 8,000 இலங்கையர்கள் மேற்கு ஜெர்மனியில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர்''

''மேற்கு ஜெர்மனியில் அரசியல் தஞ்சம்கோரி இலகுவாக வாழலாம் என்று நம்பினால் அதுமுடியாத காரியமாகும்

''ஒவ்வொரு விண்ணப்பமும் தனித்தனியாக மிக நுட்பமாகப் பரிசீலிக்கப்படும். குறிப்பிட்ட ஒருநபர் தமது நாட்டில் அரசியல் ரீதியில் கஷ்டப்பட்டாரென்று நிரூபிக்கப்படும் பட்சத்திலேயே அவருக்கு அரசியல் தஞ்சம் அளிக்கப்படுகிறது.

''இலங்கையின் தற்போதைய நிலையைத் தீய எண்ணம் கொண்ட பலர் துஷ்பிரயோகம் செய்து, தமிழ்மக்கள் பலரை பொய்யான வாக்குறுதிகளின் பேரில் ஜெர்மனிக்கு அனுப்புவதையும் நாம் அறிந்துள்ளோம் இவ்விதமான வாக்குறுதிகளில் எவ்வித உண்மையும் இல்லை'' என்றார்.

## ஈரான் எல்லைக்குள் பிரவேசிக்கும் விமானங்களுக்கு ஈராக் எச்சரிக்கை

(பாக்தாத்)

ஈரானிய ஆகாய எல்லைக்குள் கிறீன்விச் நேரப்படி இன்று காலை 5 மணிக்குப் பின்னர் வரும் சர்வதேச விமானங்களுக்கு ஏற்படக் கூடிய ஆபத்துக்குத் தாம் பொறுப்பில்லை என்று ஈராக் பகிரங்க எச்சரிக்கையொன்றை விடுத்துள்ளது.

இலங்கை நேரப்படி இன்று முற்பகல் 10-30மணிக்கு ஈராக்கின் இந்த எச்சரிக்கை அமுலுக்கு வரும்.

இந்த எச்சரிக்கை மறு அறிவித்தல் வரை அமுலில் இருக்கும் என்று ஈராக் அறிவித்துள்ளது.

இதேவேளை ஈரான் - ஈராக் யுத்தம் தற்போது பயங்கரமான உச்சக் கட்டத்தை அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடல் யுத்தத்தில் கடந்த 6 நாட்களில் 7,500ஈராக்வீரர்கள் கொல்லப்பட்டும், காயப்படுத்தப்பட்டுமுள்ளதாக ஈரான் நேற்று அறிவித்தது.

தெஹ்ரான் மீதும், ஈரானின் மூன்று நகரங்கள் மீதும் ஈராக் நேற்று விமானத் தாக்குதல்களை மேற்கொண்டதாக அறிவிக்கப்பட்டது

### ஐ.நா. பாதுகாப்புச்சபை

ஈரான் — ஈராக் யுத்தத்தை நிறுத்துமாறு ஐ நா. பாதுகாப்புச்சபை இவ்விரு நாடுகளையும் கேட்டுள்ளது.

## தக்கதோர்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வெளிவிவகார இணை அமைச்சர் குர்ஷித அலம் கான், வெளியுறவு கொள்கைத் திட்டக் குழுத்தலைவர் திரு.ஜி பார்த்தசாரதி, வெளியுறவுச் செயலாளர் ஆகியோருடன் பல வேறு மட்டங்களிலும் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார் இவ்வாறு நடத்திய பேச்சு வார்த்தைகளிலேயே அவர் இந்த உறுதியை வழங்கினார்

இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்தியின் அமெரிக்க விஜயத்துக்கு முன்பாக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயவே அவர் இந்தியா வந்திருந்தார்

அமெரிக்க ப்பிரதிஅமைச்சர் இந்தியப் பிரதமர் திரு.ரஜீவ் காந்தியையும் சந்தித்துப் பேசியுள்ளார். (இ)

## யாழ்ப்பாணத்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கப்படும் கடைகளும் நேற்றுத் திறக்கப்படவில்லை நவீன மார்க்கட்டில் ஒரு சில கடைகள் ஒற்றைக் கதவில் திறந்திருந்தன.

கடத்தப்பட்டவர்கள் விடுவிக்காத பட்சத்தில் இன்று காலையும் வர்த்தக நிலையங்கள் திறக்கப்படாதென்றும், இன்று காலை நடக்கும் வர்த்தகர் பொதுக்கூட்டத்தில் முடிவு எடுக்கப்படுமென்றும் கூறப்படுகிறது. (க)

## இருதரப்பு..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

றது என்பது பற்றியும் இலங்கைக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றார் அமைச்சர்.

இலங்கையின் ஐக்கியம், ஒருமைப்பாடு, இறைமை ஆகியவற்றுக்குள்ளேயே சகல தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக் கூடியதான அரசியல் தீர்வொன்றே பிரச்னைக்கு வழியாக அமையும் என்று அமைச்சர் கூறினார்.

இலங்கை பிரச்னைக்கு வன்செயல்கள் எந்தத் தரப்பிலிருந்து வந்தாலும் தீர்வாக அமையப் போவதில்லையென்றும் அவர் கூறினார்.

அமைச்சரின் அறிக்கையில் திருப்திகொள்ளாது தி மு க உறுப்பினர்கள் திரு. கலாநிதியும், திரு. என். வி. என் சோமுவும் லோகசபையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர். (இ)

## தென்னிலங்கை..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி. சிறிலங்கா மக்கள் கட்சி, நவ சமசமாஜக்கட்சி ஆகிய நான்கு கட்சிகளுமே சேர்ந்து இந்த கூட்டு முன்னணியை அமைக்கவுள்ளன.

இதற்கான ஆரம்ப வேலைகள் தற்போது தலைவர்கள் மட்டத்தில் நடைபெற்று வருகிறது

இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் ஒரு தெளிவான கொள்கையை முன்வைப்பதும், சுயாட்சி அடிப்படையில் இலங்கைத்தமிழர் பிரச்னைக்கு த்தீர்வு காண்பது தொடர்பாகவும் இவர்கள் தெளிவான கொள்கையொன்றை முன்வைப்பார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## வடக்கில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பங்குபற்றும் இந்த வேலை நிறுத்தத்தில் சுமார் 10,000 தொழிலாளர் பங்கு பற்றுவார்கள் என்று கூறப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் நேற்றுக் காலை திரு.எஸ் விஜயானந்தன் தலைமையில் நடந்த வட பிரதேச தொழிற் சங்கங்களின் கூட்டுக்குழுக்கூட்டத்தில்வேலை நிறுத்தம் தொடர்பான நடவடிக்கைகள் பற்றி இறுதி முடிவு எடுக்கப்பட்டன.

### ஐந்து கோரிக்கைகள்

★ வடக்குக் கிழக்கிலிருந்து சகல ஆயுதப் படையினரையும் முற்றாக வாபஸ் பெற வேண்டும்

★ (தணிக்கை)

★ படுகொலைசெய்யப்பட்ட தொழிலாளர்களின் குடும்பங்கள் உட்பட பாதிக்கப்பட்ட அனைவருக்கும் மற்றும் ஊனமுற்றோர் படுகாயமடைந்தோருக்கும் போதியளவு நஷ்டஈடு வழங்கவேண்டும்.

★ கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள சகலரையும் விடுதலை செய்வதுடன் (தணிக்கை)

★ வடக்கு கிழக்கு மாகாண தமிழ்பேசும் மக்களால் ஏற்கக்கூடிய அவர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் அடிப்படையிலான தீர்வு ஒன்றை ஏற்படுத்த வேண்டும்

இக் கோரிக்கைகள் கடந்த வருடம் டிசம்பர் 23ம் திகதி ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டது இவ்வருடம் ஜனவரி 5ம் திகதி யாழ். நகரில் நடந்த தொழிற்சங்க பேராளர் மகாநாட்டில் 5 கோரிக்கைகளையும் வலியுறுத்தி எதிர்ப்புத்தினம் நடத்துவதென முடிவுசெய்யப்பட்டது

அடையாள வேலை நிறுத்தத்தில் பங்குபற்றும் தொழிற்சங்கங்கள்: இலங்கை தொழிற்சங்கங்களின் சம்மேளனம், கூட்டுறவு ஊழியர்தொழிற்சங்கம், ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம், இலங்கை கைத்தொழில் வர்த்தக பொது ஊழியர் சங்கம் (சி எம். யூ வடபிரதேசம்), இலங்கை ஆசிரியர் சங்கம் (வடபிரதேசம்), பொது சேவை தொழிற்சங்க சம்மேளனம், இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கம், அரசாங்க எழுதுவினைஞர் சங்கம், ஸ்ரீலங்கா தேசிய போக்குவரத்து ஊழியர் சங்கம், அகில இலங்கை தமிழ் பொது தாதியர் சங்கம், இலங்கை தொழிற்சங்க சம்மேளனம், ஸ்ரீலங்கா தபால் தொலை தொடர்பு ஊழியர் சங்கம், சிமெந்துபொதுத்தொழிலாளர் சங்கம்.

மற்றும் தொழிற்சங்கங்களையும் இந்த அடையாள வேலை நிறுத்தத்தில் பங்குபற்றுமாறு வடபிரதேச தொழிற்சங்ககூட்டுக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது. (சு)

## யாழ் வர்த்தகர்கள் இன்று கூடுகிறார்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர வர்த்தகர்களின் பொதுக்கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.ஆஸ்பத்திரி வீதியிலுள்ள 110-ம் இலக்க கட்டடத்தில் நடைபெறவிருக்கிறது.

யாழ். நகர வர்த்தகர்களை எதிர்நோக்கியுள்ள பல தரப்பட்ட கஷ்டங்களினாலும் பல்வேறு துன்பங்களினாலும் செயல்ப்பட முடியாத மன வேதனையில் இருப்பதாகவும். இன்றைய நிலையில் நாம் ஒற்றுமைப்பட்டு எமக்கென ஓர் சங்கம் அமைத்து அதன் கட்டுக் கோப்பின் கீழ் செயல்ப்பட வேண்டியுள்ளது என இக்கூட்டத்திற்கான அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கச்சேரியில் தவறவிடப்பட்ட மூக்குக் கண்ணாடி

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் யாழ், செயலகத்தில் ஓய்வூதியம் பெற வந்த வயோதிபமாதுகைதவறிவிட்டுச் சென்ற மூக்குக்கண்ணாடி கண்டெடுக்கப்பட்டு. மாவட்ட அமைச்சின் இணைப்பதிகாரியும் உதவி அரசாங்க அதிபருமான திரு. எஸ், பி பாலசிங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர் திரு பாலசிங்கத்திடம் அதனைப்பெற்றுக் கொள்ளலாம்.

## வண்ணை வைத்தீஸ்வரர் திருவிழா

(யாழ்ப்பாணம்)

வண்ணை வைத்தீஸ்வரர் கோவில்மஹோற்சவம் நேற்று நண்பகல் 12 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது தினம் பகல் திருவிழா காலை 9மணிக்கும், மாலை திருவிழா நண்பகல் 1½ மணிக்கும் ஆரம்பமாகும். (ப)

## கலந்துரையாடல் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க உறுப்பினர்களுக்கும் கல்விச் சேவைக்குழு உறுப்பினர் சட்டத்தரணி க.ஜெயக்குமார் அவர்களுக்குமிடையே நாளை யாழ்.வேம்படி மகளிர்கல்லூரியில் நடைபெறவிருந்த கலந்துரையாடல் திகதி குறிப்பிடப்படாது பிற்போடப்பட்டுள்ளதாக இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்தார்.

## லொறி எடுத்துச் சென்றனர்

(சுன்னாகம்)

புத்தூர் நவக்கிரி என்ற இடத்தில் இனந்தெரியாத இளைஞர்களால் லொறி ஒன்று எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. தனியார் கராஜ் ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போதே இந்த லொறி கடத்தப்பட்டது.

## அதிகரிப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு- குறிகாட்டுவான் அரசினர் மோட்டார் படகுக் கட்டணம் பத்துமடங்கால் அதிகரித்துள்ளது.

வழமையாகக் கிடைக்கும் டீசல் பெறமுடியாமையினாலேயே இவ்வதிகரிப்பு என்று சொல்லப்பட்டபோதிலும் வழமையான கட்டணத்திற்குப் பிரயாணச் சீட்டு வழங்கி மேலதிகமாக அறவீடு செய்யப்படுகின்றது என்று கூறப்படுகின்றது.

இந்தப் பிரயாணக் கட்டண அதிகரிப்பால் பிரயாணிகள் ஆத்திரமும், அதிருப்தியும் அடைந்துள்ளனர்.

## ஏராளமான..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வாகனங்களையும் ஆயுத படையினர் மீட்டுள்ளனர்.

''ஆயுதங்கள், வெடிமருந்துகள், தொலை தொடர்பு சாதனங்கள் என்பனவும் அங்கிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளன''

## அகதிகள் வருகை. .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தொகை தற்போது குறைந்துள்ளது.

இலங்கை அதிகாரிகள் வட பகுதியிலுள்ள படகுகளைக் கைப்பற்றியுள்ளமையினாலேயே அகதிகள் வருவது குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது

பெரும்பான்மையான அகதிகள் மண்டபத்திலும் பிற இடங்களிலுமுள்ள முகாம்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

## மரண அறிவித்தல்

### திரு. லாசரஸ் வஸ்தியாம்பிள்ளை

திரு. லாசரஸ் வஸ்தியாம்பிள்ளை (ஆயுள்வேத வைத்தியர்) இறைவனடி சேர்ந்தார். இவர் காலம் சென்ற திரு திருமதி லாசரஸ் பொன்னர் அவர்களின் அன்பு மகனுவார் அன்னாரின் பூதவுடல் (18-3-85) திங்கட்கிழமை மாலை 3-30 மணிக்கு யாழ் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

26 A, பீச்றோட், குருநகர், யாழ்ப்பாணம். (2327)

இப்பத்திரிகை ஈழநாடு' லிமிட்டெட் தொபனத்தாரால் யாழ்ப்பாணம், இவன்கோவில் மேற்கு வீதி, 66ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு மார்ச மாதம் 18 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the Genera Post office Sri Lanka unde Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Telephone number 22389 - 24126.